# மாணவர் விடியல்

மலர் : 32 புரட்டாதி - ஐப்பசி 2008

இயேசு சபை அகதிப்பணி, 31, கிளிபர்ட் பிளேஸ், கொழும்பு – 04. தொலைபேசி : 011 2504384

# சேவை




'தோழமையோடு, குரல் கொடுத்து பணி செய்வோம்'

# சித்திரமும் கைப்பழக்கம்




**K. குமார்**
தம்பனைக்குளம்



**சூ. மோசறோமி**
பள்ளிமுனை




**P. பிரகாஸ்**
பொற்கேணி



**அ. பிரசாற்**
செங்கலடி



**K. மகிழ்டா**
பெரியகமம்



**K. கில்டன் சாள்ஸ்**
பெரியகமம்



**J. வெலிங்டன்**
கட்டாஸ்பத்திரி




**T. தர்சினி றோச்**
பள்ளிமுனை



**பி.றுக்மன் அரவிந்தன்**
**றோச் -** பள்ளிமுனை



**சூ.யூட் கிஷாந்தன்**
பள்ளிமுனை



**K. கில்டன் சாள்ஸ்**
பெரியகமம்



**செ. அன்றோ றொசற்ரா**
பள்ளிமுனை



**A. வேஜினி பிகிறாடோ**
பள்ளிமுனை




**N. சஜிற்தா**
நாவற்சோலை



**S. கிருசாந்தன்**
வவுனியா



**எ. லியோன்சி டயஸ்**
முள்ளிக்குளம்



**V.அன்ரன் பெலிக்ஸ்**
பெரியகமம்



**இரா. யசோதரன்**
புல்லுமலை




**ச. வினோதன்**
மணியர்குளம்




**ஆ. தர்சினி**
கோப்பாவெளி

*அன்புப் பிள்ளைகளே!*

***இயேசு சபை அகதிப் பணியினரின் அன்பும் இறை ஆசியும்!***

*'யாதும் ஊரே யாவரும் கேளீர்'* என்பதற்கேற்ப இந்த உலகமானது என்னுடைய வீடு, அதில் வாழும் மனிதர்கள் என் உடன் பிறந்தவர்கள். அவர்களுக்குச் சேவை செய்வதில் நான் பெருமை கொள்கிறேன் என்று நாம் ஒவ்வொருவரும் உணர்ந்தவர்களாய் சேவை செய்ய முன்வர வேண்டும்.

உதவி செய்து வாழ்கின்ற வாழ்வே ஒப்பற்ற வாழ்வு. இன்று நீங்கள் ஒருவருக்கு உதவினால், நிச்சமாக நாளை ஒருவர் உங்களுக்கு உதவுவார்.

அரிய நேரத்தில் உரிய சேவை செய்வதே சிறந்த சேவை. பணம் இருந்தால்மட்டும் சேவை செய்ய முடியும் என்றில்லை. பணமின்றியே பல சேவை செய்ய முடியும்.

அன்பை இழந்து, அனைவராலும் கைவிடப் பட்டவர்களுக்கு உதவுதலே சேவை என்கிறோம். அவ்வாறு கைவிடப்பட்டவர்களுக்கான சேவையில் நாம் ஈடுபடும் போது பின்னர் செய்யலாம் என்றோ, இன்னுமொருவர் செய்வார் என்றோ காத்திருக்கக் கூடாது. அத்துடன் யாருக்குச் செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? என்று சிந்தித்துக் கொண்டிருக்காமல், இன, மத, மொழி, பேதங்களுக்கு அப்பாற்பட்டதாக நாம் செய்யும் சேவைகள் அமைய வேண்டும்.

எம் ஒவ்வொருவரின் வாழ்விலும் சேவை மனப்பான்மை தானாகவே தழைக்க வேண்டும். சேவை மனப்பான்மை அற்றோராய் வாழ்ந்தால், எமது வாழ்வே விரயமாகிவிடும். பல பணிகளில் ஈடுபடும் போதுதான் பல உறவுகளை நாம் சந்திக்கின்றோம். புதிய உறவினையும் ஏற்படுத்திக் கொள்கிறோம். அதுவே எம்மை இறை உறவில் ஒன்றிக்கச் செய்கிறது.

மனிதன் அன்றாட வாழ்வில் வளரவும், மகிழ்வுடன் வாழவும், முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமாயின், மனித மனமானது நற்செயல்களில் ஈடுபட வேண்டும்.

அனைத்தையும் இழந்து, ஆதரவற்றோராய், துன்பத்தில் மூழ்கிய, அன்பிற்காக ஏங்குகின்ற உள்ளங்களுக்காக சேவை செய்யும் போது நாம் நிச்சயமாக முழு மன நிறைவை அடையமுடியும். அவர்கள் ஆனந்தமாய் இருக்க நாம் காரணமாக இருக்கும் போது எமது மனமும் ஆனந்தமடைகிறது. எனவே சேவை, மனத்திற்கு இன்பத்தைத் தரக்கூடியது என்று கூறுவதில் ஐயமில்லை.

கல்வியும், ஒழுக்கமும் ஒரு மனிதனை முழு மனிதன் ஆக்குகிறது. சேவை மனப்பான்மையோ, ஒருவனை உயர்ந்தவனாகவும், உத்தமனாகவும் மாற்றுகிறது. அத்துடன் ஒருவனது மரியாதையையும், சுயமதிப்பையும் உயர்த்துகிறது. எனவே சிறுபராயத்தில் இருந்து கல்வியில் சிறந்து, சேவை செய்யும் மனப்பான்மை உடையோராய் வளர வேண்டும்.

நீங்கள் கற்கும் காலத்தில் உங்கள் சக நண்பர்களுக்கு உங்களால் முடிந்த உதவியைச் செய்யலாம். உங்கள் வீட்டிலோ, பாடசாலையிலோ சிரமதானங்களில், பொது வேலைகளில் ஈடுபடலாம். மேலும் நோயுற்றோருக்கும், முதியோர்களுக்கும், குழந்தைகளுக்கும், பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் சிறிய உதவிகள் புரிந்து நல்ல பிள்ளைகளாக வளரவேண்டும்.

இவ்வாறு நீங்கள் உங்கள் சூழலில் உதவிகள், சேவைகள் செய்யக் கற்றுக் கொண்டால் எதிர்காலத்தில் உலகம் போற்றும் உத்தம மனிதராகத் திகழ்வீர்கள்.

நாம் ஒவ்வொருவரும் இலங்கை மாதாவின் அன்புப் பிள்ளைகள். பூமியில் பிறந்தோம், வாழ்ந்தோம் என்றில்லாமல், உங்களால் முடிந்தவரை அனைவராலும் கைவிடப்பட்டவர்களுக்காக உதவி செய்து, நற்செயல்களில் ஈடுபட்டு வாழ்வீர்களானால், முழுமையான வாழ்வை அனுபவித்த திருப்தி உங்களுக்கு ஏற்படும்.

அனைவரிடத்திலும் அன்புடையோராய், தன்னலம் கருதாத பண்புடையோராய், கைமாறு கருதாத, சேவை மனப்பான்மை உடையோராய் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் நாடும் நலம் பெறும்.

*'என் கடன் பணிசெய்து கிடப்பதே'* என்ற வாக்கினைப் பின்பற்றி, நம் நாட்டிற்கும் வீட்டிற்கும் அரும் பெரும் சேவை செய்திட அனைவரும் முன்வருவோம்! உலகிலே நீங்கள் நல்ல சேவைகள் புரிந்து சிறந்த தலைவர்களாக வாழ்ந்திட எனது நல் வாழ்த்துக்கள்!

நன்றி!

மாணவர் விடியலுக்கான 33வது தலைப்பு **'ஒழுக்கம்'** இது குறித்த உங்கள் ஆக்கங்களை ஐப்பசி 5ந் திகதிக்கு முன்னதாக எமக்கு அனுப்பி வையுங்கள்.

அன்புடன்

**Fr. கமல் அன்றாடி.**

**'நாம் செய்யும் எந்தப் பணியையும் இன்னும் கொஞ்சம் சிறப்பாகவும், புதுமையாகவும் செய்வோம். வளர்ச்சி தானாகவே வந்து சேரும்.'**

## சேவை செய்திட விரைந்திடுவோம்!

உறவுகளை இழந்து,
உடமைகளை இழந்து,
உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
ஊதாரிகளாக தினம்,
உறக்கமின்றி அலையும் - எம்
உடன்பிறவா உறவுகளின்,
உயிர்காக்க விரைந்து,
உடன் "சேவை" செய்திடுங்கள்!

இரவு, பகலாய்
இயலாமையுடனும், பசியுடனும்
இழந்த நெஞ்சங்களையும்,
இறந்த உடல்களையும் - கொண்டு
இல்லிடங்களை விட்டகன்று,
இலையில்லா மரங்களின் கீழ் வாழும் - எம்
இனிய உறவுகளின் துயரத்தில்,
பங்கெடுக்க விரைந்து,
உடன் "சேவை" செய்திடுங்கள்!



பறந்து வரும் கொடிய,
வான் பறவைகளின்,
குண்டு மழையில்,
பால் கொடுத்து பசி தீர்க்கும்,
அன்புத் தாயையும்,
அரவணைக்கும் தந்தையையும்
இழந்து தவிக்கும் எம்,
பச்சிளம் பாலகரினதும்,
பிஞ்சுக் குழந்தைகளினதும்
பற்றி எரியும் பசியைப்
பாசத்துடன் போக்கிட விரைந்து,
உடன் "சேவை" செய்திடுங்கள்!

கூன் விழுந்த நிலையிலும் - தம்
கூட இருந்த பிள்ளைகளையும்,
கூடி இருந்து குட்டிக் கதை கேட்ட
குழந்தைகளையும் பிரிந்து,
கூவி அழைத்தாலும்,
குடிக்க தண்ணீர் கூட கொடுக்க
உறவுகளின்றி கூனிக்குறுகி,
நாளும் இழுபடும் எம்
மூதாதையரைக் - காக்க
உடன் விரைந்து எம்
உள்ளங்களுக்காக "சேவை" செய்திடுங்கள்!

**யூ.டிவோன்ஷி,** இரணைப்பாலை.

## உயர்த்திடும் சேவை

உன்னை நீ நேசி!
உன் வாழ்வின் அர்த்தங்கள் புரியும்!
உன்னுள் இருக்கும் சேவை தனை,
உலகிற்கு உவந்தே செய்திடு!
உலகம் போற்றும் உத்தமனாய்,
உவப்புடன் என்றும் வாழ்ந்திடு!

**அ. நிறோமி,** ஆனைக்கோட்டை.

## தொடரும் மானிட சேவை!

சேவை தனைப் பாரடா - பாரில்
நண்பா சேவைதனைப் பாரடா
நல்லவற்றைச் செய்து வரும்
சேவைகளைப் பாரடா!



உலகினிலே சிறந்து இன்னும்
விளங்குதடா நல்சேவையே!
நீயும் முயன்று செய்யடா
நிதமும் நன்றாய் வாழடா!

கல்வி, சுகாதாரம் என்றெல்லாம்
தொடருதடா மானிட சேவைகள்!
நீயும் முயன்று பாரடா
மகிழ்வாய் என்றும் வாழடா!

சேவைகள் புவியினில் ஓங்கிடவே
ஒன்றாய்க் கூடி பணிபுரிவோம்!
நம் இளையோர் இன்புற்று வாழ்ந்திட - சமூக
சேவையை நாம் செய்திடுவோம்!

**வி. விஜயசீலி,** தரம் - 9,
பெரியகுஞ்சுக்குளம்.

## உயரிய சேவை!



உயிரிலும் உயிராக,
உண்மை அன்பைப் பொழிந்து,
உளம் கனிந்த சேவைதனை,
ஊக்கமுடன் உவந்தளித்து,
வீட்டினிலே முடங்கிக் கிடந்தவரை,
முன்னேற வழிவகுத்து,
கல்வி பயிலும் மாணவருக்கும்,
கருத்துடனே கல்வியூட்டி,
கவலை நிறைந்த உள்ளங்களை,
கனிவுடனே மகிழ்வித்து,
அகதி நிலை மாறிட,
அரும் பெரும் சேவைதனை,
அகிலம் எங்கும் செய்துவரும்,
இயேசு சபை அகதிப்பணியே,
இகத்தினிலே உம் சேவை,
இன்றும் என்றும் வாழியவே!

**கு. ரேக்கா,** உடுவில்.

## SERVICE


| | | |
|---|---|---|
| S | SIMPLICITY | எளிமை |
| E | EFFICIENCY | திறமை |
| R | RESPONCIBILITY | பொறுப்பு |
| V | VISIONARY | தூரநோக்கு |
| I | INTERGRATE | ஒருங்கிணைப்பு |
| C | CARING | கவனிப்பு |
| E | EFFECTIVENESS | தாக்கம் |

**அருட்சகோதரி லக்ஸ்மி,** வவுனியா.



மக்களைத் தாக்கும் கதிர்வீச்சுள்ள இயற்கை வாயு - **ரேடான்**

## உன் சேவையில்...



சோம்பலைத் தூக்கி எறிந்திடு!
சோகத்தை விட்டு எழுந்திரு!
அறிவினை ஓங்கச் செய்திடு!
அன்பர்களை நல்வழி நடத்திடு!
எந்நேரமும் உழைத்திடு!
ஏழ்மையை ஒழித்திடு!
வறியவர்களுக்கு உதவிடு!
வஞ்சனையை நீக்கிடு!
நேர்வழியில் வாழ்ந்திடு - நீ
நேர்மையைக் கைக்கொண்டிடு!

**க.தனுஷா,** சிவன்தீவு.

## ஆசானின் சேவை

சேவை செய்யும் ஆசான்களே!
பல்லாண்டு காலம் வாழுங்களே!
உங்கள் சேவை சிறந்திடவே,
வாழ்த்துகிறோம் நாங்களே!

தடையேதும் இன்றியே – கடமை
தவறிடாமல் என்றுமே
தயக்கமின்றி நாளுமே
செய்கின்றீர் நல் சேவையே!




அன்பு என்னும் பண்பினை
அகத்தினிலே சுமந்து கொண்டு,
அகிலம் போற்றும் மாணவராய் – நாம்
அகமகிழ்ந்து வாழ வழி சமைத்தீர்!

உலகில் உள்ள சேவைகளில்,
உமது சேவை மகத்தானதே!
உம்மை என்றும் வாழ்த்தியே,
உமது வழியில் நாம் நடப்போம்!

**வி.டிவின்சன்,** பெரியகுஞ்சுக்குளம்.

## உயர்வான சேவை செய்!

பண்பின் பகிர்வாய்,
பாசத்தின் சிகரமாய்,
பணியின் நிறைவாய்,
பணிந்து நீ சேவை செய்!



தன்நலம் துறந்து,
தற்பெருமை கொள்ளாமல்,
இனிய மனத்துடன்,
இன்பமாய் சேவை செய்!

சாதிமத பேதமின்றி,
சமத்துவமாய் சேவை செய்!
உயர்வு தாழ்வு பாராமல்,
உத்தமனாய் சேவை செய்!

**மு.அமலநாயகி,** அளவக்கை.

நம் கடமையைத் தவறாது செய்வதில் தான் தலையாய இன்பம் இருக்கிறது. நாம் இன்பமாய் இருந்தால்தான் நமக்கும் நன்மை, பிறருக்கும் நன்மை!

## ஒழுக்கமுள்ள சேவை!



உனது சேவை உலகில் ஓங்க,
ஒழுக்கமுடன் செயற்படு!
மனித மாண்பு மண்ணில் மலர,
மகிழ்வாய் என்றும் சேவை செய்திடு!
பட்டம், பதவி, பணத்தை சேர்க்காது,
பண்புடன் என்றும் சேவை செய்திடு!
உன்னுள் பிறரன்பையும் வளர்த்து,
உயரிய சேவை செய்திடு!
பட்டாம் பூச்சி போல் பறந்து திரிந்து,
பாரபட்சமின்றி சேவை செய்திடு!
உன்னத சேவைகள் செய்து நீ,
உலகின் ஒளியாய் மிளிர்ந்திடு!

**ஸ்.சாளினி,** ஆனைக்கோட்டை.

## தேவையறிந்து சேவை செய்!

நல்லுள்ளத்தின் சேவை
நாட்டுக்கு நிச்சயம் தேவை!
சிறியோர் பெரியோர் சேவை
சிறுமைக்கும், வறுமைக்கும் தேவை!
ஆசிரியரின் கற்பித்தல் சேவை
அவசியம் மாணவர்களுக்குத் தேவை!
வைத்தியரின் மருத்துவச் சேவை
என்றும் நோயாளிக்குத் தேவை!
இயேசு சபை அகதிப்பணியின் சேவை
நாளும் பொழுதும் மக்களுக்குத் தேவை!

**கி.கியூபேட்,** தரம் - 4, பொற்கேணி.

## உங்கள் சிந்தனைக்கு!

- துடிப்பான உள்ளம் ஒரு நாளும் சோக கீதம் பாடாது.
- தன்னம்பிக்கை தான் பெரிய சொத்து .
- பிறருக்கு உதவி செய்யாதவர்கள் பிறரிடமிருந்து உதவியை எதிர்பாக்க முடியாது.
- எல்லா மனிதனின் இதயமும் ஒரே மாதிரியானது. ஆனால் எண்ணங்களோ பல மாதிரியானவை.
- விதைக்கப்பட்ட தானியங்கள் பயிராக வளர்வதைப் போல் வீசப்பட்ட வார்த்தைகள் பகையாக வளர்ந்து இருக்கும்.
- பணம் பேச ஆரம்பிக்கும் போது உண்மை ஊமையாகி விடுகிறது.

**க.பிரியா,** வள்ளுவர்புரம்.

பகைமையை அன்பினால் வெல்லுங்கள்! சோம்பலை உங்கள் செயல் ஊக்கத்தினால் வெல்லுங்கள்!



பூமத்திய ரேகையை இரண்டு முறை கடக்கும் உலகின் ஒரே நதி - அமேசன்

# சமூகசேவை!


சமூகசேவை என்றதும் எமக்கு நினைவுக்கு வருபவர் அன்னை தெரேசாதான். சமூக சேவகர்களில் எல்லாம் தலைசிறந்தவர் அவர். தனது நலனைக் கருதாது, தான் உண்ண, உடுக்க, உறங்க என்ன செய்வது என்று பொருட்படுத்தாது பிறர் நலன் கருதி வாழ்ந்தவர் அவர். அவரைப்போல தனது சொந்த நலன்களைப் புறந்தள்ளி பிறர் நலன்கருதி வாழ்பவர்களைச் சமூகசேவை செய்பவர்கள் என்கிறோம்.

ஆதரவற்ற குழந்தைகளுக்கு தங்க இடமும், உண்ண உணவும், உடுக்க உடையும் கொடுத்து அவர்களுக்கு கல்வியும் தொழிற்பயிற்சியும் அளிக்கும் சமூகசேவை நிறுவனங்கள் நிறைய உள்ளன. காலம் முழுதும் குடிசைகளில் உழல்வோருக்கு சிறிய கல்லாலான வீடு கட்டிக் கொடுத்து சமூகசேவை செய்பவர்களையும் பார்க்கிறோம். தொழுநோயாளிகளுக்கு மருத்துவமும் அவர்களுக்குப் புனர்வாழ்வும் வழங்குவது, மனநலம் குறைந்தவர்களைப் பராமரிப்பது, கைவிடப்பட்ட முதியோருக்கு ஆதரவாயிருப்பது, குழந்தைத் தொழிலாளர்களுக்கு கல்வி வாய்ப்புத் தருவது போன்ற பலவிதமான செயல்கள் சமூகசேவை எனப்படுகின்றன.

சமூகசேவை செய்வதற்கு நிறையப் பணம் வேண்டும் என்பது உண்மை. அதைவிட முக்கியமாக சமூகசேவை செய்யும் மனம் வேண்டும். சேவை மனம் கொண்டவர்களுக்கு உதவ ஆயிரம் பேர் காத்திருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் பணத்தைத் தருகிறார்கள். தங்கள் நேரத்தையும் உழைப்பையும் தரமாட்டார்கள். ஒருவர் தனது உழைப்பையும், நேரத்தையும் மற்றவர்களுக்காகச் செலவிடுவதையே சமூகசேவை என்கிறோம். மற்றவர்களுக்காக நமது நேரத்தையும் உழைப்பையும் சிறிதாவது செலவிடுவோம். அவர்களின் மகிழ்ச்சியில் நாமும் பங்குபெறுவோம்! மகிழ்வோம்!

**ஜெ. ஏஞ்சலின்,** மட்டக்களப்பு.

## என்றும் செய்வோம் சேவை...!



வீட்டிற்கு சேவை செய்தால்
வீட்டார் என்றும் மகிழ்வர்.
ஊருக்கு சேவை செய்தால்
உறவுகள் எமைத் தேடி வரும்.
அன்புடன் சேவை செய்தால்
அகிலம் எமைப் போற்றும்.
ஆர்வத்துடன் சேவை செய்வோம்!
ஆனந்தமாய் வாழ்வோம்!

**கௌ. சுஜந்தன்,** சிவசக்திபுரம்.

தோல்வியைக் கண்டு துவளாதீர்கள்!
அறிவை மென்மேலும் பெருக்கிக் கொள்ள
தரப்பட்ட வாய்ப்பே தோல்வி!

# சேவைகளின் வகைகள் பல... அவற்றுள் சில.......

## ஆசிரியர் சேவை:-




குற்றம் என்னில் நீக்கிடுவார்.
குணத்தை என்னில் ஏற்றிடுவார்.
பெற்றவர் தம் மனம் மகிழ்ந்திடவே
பெருமைப்படுத்தி வாழ வைப்பார்.
மற்றவர் செய்யும் பிழை பொறுக்கும்
மனிதம் என்னில் மலர வைப்பார்.
உற்ற துணையாம் உயிரெனக்கு
மெத்த நல்ல ஆசிரியர்.

## தபால் சேவை:-




மணியடித்து வாசல் தட்டி.
தபால் தரும் ஐயா.
பிணி மனங்கள் பணிய வைக்கும்.
பிரியமான ஐயா
அணியுமுடை காக்கி நிறம்.
சைக்கிளது சிவப்பு நிறம்.
துணிவுடனே காடு மலை ஏறி.
எங்கும் செல்வார்.

## பொலிஸ் சேவை:-



காவல் துறை என்று சொன்னால்
கவலை போகுதே
நாவில் ஏறி வந்த பயம்
நசுங்கிப் போகுதே
ஆவலுடன் காவல் தேடி
நாடி ஓடினால் - எம்மை
ஆற்றுப்படுத்துவார்.

## வைத்தியர் சேவை:-



ஆண்டவனின் சேவை தனை
அர்ப்பணிப்பாய் செய்வார்.
நீண்ட வழி வந்தமெக்கு
நோய் தீர்த்துச் செல்வார்
வேதம் கூறும் தேவராகி
மருத்துவமும் செய்வார்.
மருந்து தனை விருந்தாக்கி
மகிழ்வுடன் தருவார்.
மாமருந்தை ஊசி மூலம்
ஏற்றி எமைக்காப்பார்.

**வி. ஆன்ஷமிலி, தரம் - 08** தலைமன்னார் கிராமம்.

## அதிகமாக நற்செயலில் ஈடுபடுங்கள்!

பார்ப்பதைவிட அதிகமாகக் கவனம் செலுத்தி புரிந்து கொள்ளுங்கள். கேட்பதைவிட அதிகமாகக் கவனம் செலுத்தி அறிந்து கொள்ளுங்கள். படிப்பதை விட அதிகமாக, மனதில் தக்கவைத்துக் கொள்ளுங்கள். நினைப்பதை விட அதிகமாக நல்ல செயல்களில் நம்பிக்கையுடன் ஈடுபடுங்கள். வெற்றி உங்களுக்கே!



வைத்தியர்கள் அதிகமாக தற்கொலை செய்து கொள்ளும் நாடு - **அமெரிக்கா**


# சிறந்த சேவை செய்..!

*அன்புடன் சேவை செய்!*
*அயலவருக்கும் சேவை செய்!*
*திட்டமிட்டு சேவை செய்!*
*தீயதை விடுத்து சேவை செய்!*
*நண்பனுக்கும் சேவை செய்!*
*நல்லவருக்கும் சேவை செய்!*
*சிறியவருக்கும் சேவை செய்!*
*பெரியவருக்கும் சேவை செய்!*
*சிந்தித்து சேவை செய்!*
*சிறப்புடன் சேவை செய்!*



**வி.லிதுஷா,** மட்டக்களப்பு,

# நான் விரும்பும் சேவைகள்!



**ஆசானாக** நானிருந்தால்.....
அறிவுரைகள் கூறிடுவேன்!
சின்னஞ்சிறிய பாலருக்கு,
நல்ல கல்வி நான் தருவேன்!



**வைத்தியனாய்** நான் ஆனால்.....
நாடி பிடித்துப் பார்த்திடுவேன்!
நல்ல மருந்து கொடுத்திடுவேன்!
ஊக்கத்துடன் நோயாளிக்கு,
ஊசி மருந்து ஏற்றிடுவேன்!



**தபாற்காரன்** நான் ஆனால்...
தபாலகம் சென்றிடுவேன்!
வீடுவீடாய் சென்று நானும்,
தபாற் தந்தி கொடுத்திடுவேன்!



**வியாபாரி** நான் ஆனால்....
விற்றிடுவேன் பல பொருட்கள்!
காய்கறிகள் விற்றிடுவேன்,
கண்ணியமாய் நடந்திடுவேன்!

**வீ.வினோதா,** ஈச்சிலம்பற்று.

# முழுமையடைந்த மனிதன் யார்?



நன்றியுள்ள இதயம் உள்ளவன்.
சிந்திக்கும் மனம் கொண்டவன்.
அன்பு கலந்த புன்னகை உடையவன்.
இனிய வார்த்தை பேசுபவன்.
உதவும் உள்ளம் கொண்டவன்.
துணிந்து சேவை செய்பவன்.
செவிமடுக்கும் தன்மை கொண்டவன்.
கிரகிக்கும் ஆற்றல் பெற்றவன்.
இவை அனைத்தும் நிறையப் பெற்றவனே முழுமையான மனிதனாவான்.

**அ.மதியரசி,** சிதம்பரபுரம்.

> 'சுய கட்டுப்பாட்டுடன் செய்யும் வேலை
> நூறு மடங்கு பலன் தரும்.'

# J.R.S සේවය අගය කරමු

*ගමෙන් ගමට ගෙයින් ගෙට*
*දරුවන්ට - කතුන්ට අතදෙන*
*ගෙට ගුලි වී සිටි හැමටම*
*ආලෝකය ගෙන දෙන*

*ඔබ - **J.R.S***

*බරක් නොවී රටට ගමට*
*ජීවිකාව ගෙන යන මග*
*පහදා දී පෙන්වා දී,*
*ස්වයං රැකියා ගෙන දෙන*
*අසරණ සැමට පිහිට වන*

*ඔබ - **J.R.S***

*අගය කරමු ඔබ සේවය*
*ගමන් කරමු පෙන් වූ මග*
*අමතක නොවේ ඔබ මතකය*
*සැමදා රැඳී දිලේ නාමය*

*ඔබ - **J.R.S***

**නිරෝෂා ලක්මාලී පීරිස්, වවුනියාව.**

| | | |
|---|---|---|
| மிக மிக நல்ல நாள் | - | **இன்று** |
| மிகப்பெரிய வெகுமதி | - | **மன்னிப்பு** |
| மிகவும் வேண்டியது | - | **பணிவு** |
| மிகப்பெரிய தேவை | - | **நம்பிக்கை** |
| மிகக் கொடிய நோய் | - | **பேராசை** |
| மிகவும் சுலபமானது | - | **குற்றம் காணல்** |
| நம்பக் கூடாதது | - | **வதந்தி** |
| ஆபத்தை விளைவிப்பது | - | **அதிக பேச்சு** |
| செய்யக் கூடாதது | - | **நம்பிக்கைத்துரோகம்** |
| செய்யக்கூடியது | - | **உதவி** |
| விலக்க வேண்டியது | - | **சோம்பேறித்தனம்** |
| உயர்வுக்கு வழி | - | **உழைப்பு** |
| நழுவவிடக்கூடாதது | - | **வாய்ப்பு** |
| பிரியக்கூடாதது | - | **நட்பு** |
| மறக்கக் கூடாதது | - | **நன்றி** |

**எ.அனட்சிந்துஜா,** வவுனியா.

# மூன்று சக்திகள்.

தெளிவான குறிக்கோள், திட்டத்துடன் செயலாற்றுதல், வலிமை மிக்க மன உறுதி இந்த மூன்றினால் சாதிக்க முடியாத செயல் இந்த உலகில் எதுவுமே இல்லை. இவற்றின் மூலம் தங்கள் சக்தியை வெளிப்படுத்துகின்றவர்களே சிறந்த மனிதர்களாகப் பிரகாசிக்கிறார்கள்.

> உலகத்தில் உள்ள
> எல்லாத் தலைகளையும் விட
> ஒரு நல்ல இதயம் மிகவும் மேலானது.



40 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் விமானம் - **போயிங்**

# நினைவிலிருந்து சில......



அன்பின் இலக்கணமாய்,
ஒளியின் சுடராய்,
உண்மையின் சிகரமாய் உயிரூட்ட,
எம் மண்ணிற்கு வந்தவரே!

இடர்கள் பல வந்தாலும்,
இரவு பகல் பாராது,
இன்பமாய் பணிதனை செய்ய,
இறைவன் உம்மை அழைத்தாரே!

பாகுபாடு பாராத உம் பணிதனை,
பாராட்ட நினைத்த வேளையில்,
பாரினில் உம்மைக் காணவில்லை என்று
பரிதவித்து நிற்கின்றோமே!

ஐம்பது ஆண்டுகள் பணி செய்ய,
ஆர்வம் கொண்ட உம்மை,
பத்தாண்டுகளில் அழைத்தாரே – ஆனால்
ஓராயிரம் உள்ளங்களில் ஓவியமாய் திகழ்கின்றீரே!

எமைவிட்டு நீர் பிரிந்து சென்றாலும்,
எம் உள்ளங்களில் இன்றும் வாழ்கின்றீர்!
ஓராண்டுகள் கடந்தாலும்,
ஓர் நிமிடங்களாகவே உம் நினைவலைகள்!

நல்லாயனாக இருந்தெமை நல்வழி நடத்தினீரே!
நலமாய் நாம் வாழ உம் ஆசிகளையும் தந்தீரே!
நலமாய் சென்று வருகிறேன் என கூறினீரே!
நகர்ந்து விட்டதே ஓராண்டும் உம் நினைவில்......!

**பே.ஜக்ஷன்,** மன்னார்.

## நல்ல மனப்பாங்கால் விளையும் நன்மைகள்

நல்ல மனப்பாங்கானது...

- உற்பத்தித் திறனைப் பெருக்குகிறது.
- ஒரு குழுவாக வேலை செய்யும் பக்குவத்தை வளர்க்கிறது.
- பிரச்சினைகளைத் தீர்க்கிறது.
- வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகிறது.
- நல்ல சுமுகமான சூழலை உருவாக்குகிறது.
- விசுவாசத் தன்மையை வளர்க்கிறது.
- மன அழுத்தத்தைக் குறைக்கிறது.
- இனிய குணநலம் உள்ளவராக எம்மை ஆக்குகிறது.
- சேவை செய்யத் தூண்டுகிறது.

# இதயத்தின் குமுறல்கள்!

சில நேரம் சிரித்து
சிலநேரம் கோபம் கொண்டு
விஸ்வரூபம் எடுக்கும்
இயற்கை உலகினிலே
எது நடக்கும்? எப்போது நடக்கும் என்று
கூறக் கூட தீர்க்கதரிசிகளும் இல்லையே!

பாசம் என்னும் உம் அன்பை
நேசத்துடன் எதிர்பார்த்தோம்!
மோசம் என்னும் வெடிகள் உம்மை
நாசம் செய்து விட்டதே!
உம் உண்மை அன்பிற்கு எமது பரிசு
கண்ணீர் மட்டும் தானா?

வாழ்க்கையின் சோகங்களை
வார்த்தையால் சொல்ல முடிவதில்லை!
வசந்தம் நாளை உதயமானாலும்
சொல்வதற்கும் நீர் எம்மோடு இல்லை!
வாழ்வதற்கும் நீர் உயிரோடு இல்லை!

முதற்கனியாம் உம்மை,
முதல்வனுக்கு அளித்திட
முன்வந்த பெற்றோரின் விருப்பம் போல்
மனமுவந்து ஏற்று நீர்
இறை பணியைத் தொடர்ந்தீரே!
அதிலும் சிறந்த பணியாம்
இயேசு சபை அகதிப்பணியை
மாறாத புன்னகையுடன் மகிழ்வாய் ஏற்றீரே!



உம் கள்ளமில்லா மனமும்,
நிதமும் புன்னகை ததும்பும் முகமும்,
பிறருக்காக எதையும் கொடுத்துதவும்
தாராள குணமும்,
துன்பத்திலும் தளராத மனஉறுதியும்,
கலகலப்பான பேச்சும் ~ எம்மை
கண்ணீர் சொரிந்திட வைக்கிறதே!

எறும்பைப் போன்ற சுறுசுறுப்பான நடையும்,
சிறுவர் மனதை வசீகரிக்கும் சுபாவமும்,
கல்வியிலும், கணனியிலும் மிகுந்த அறிவும்
அதிகமாய் கொடுத்த இறைவன்
உம்மை ஏன் பாதியில் அழைத்தார்?
உம் பிரிவை எண்ணி நாம்
நீங்காத நினைவுகளுடன்
உமக்காக இறைவனை வேண்டுகிறோம்!

**JRS பணியாளர்கள்,** மன்னார்.

**'மனிதங்கள் மரித்தாலும், செய்த சேவைகள் என்றும் மரிப்பதில்லை!'**

நீங்கள் எப்படிப்பட்ட வேலையைச் செய்தாலும், அதை மனப்பூர்வமாக விரும்பி அக்கறையுடன் செய்யுங்கள். அதுவே உங்களை மகிழ்விக்கும்!

# ஓராண்டின் நினைவுகளுடன்......!

தந்தையாய், தோழனாய், சகோதரனாய் - நற்
குருமணியாய், நல் ஆசானாய்,
நகைச்சுவையாளனாய்,
எம் *JRS* குடும்பத்திற்கு நல்ல
தலைவனாய் வந்தீர்!
உம்மை நினைக்கும்போதெல்லாம் - உம்
ஞாபகங்கள் அலை அலையாய் எழுகின்றன!

ஒரு நிகழ்ச்சிக்கு ஒப்புக்ககொண்டால்
புயலடித்தாலும், மழையடித்தாலும்
போகாமல் இருக்கமாட்டீர் - தந்தையே
உம் நடைமுறை வாழ்க்கையின்
நல்ல அம்சங்கள் எல்லாம்
எம் மனதில் நிலைத்து விட்டன.
நித்தம் எம்முடன் நீர் பேசும்
நகைச்சுவை வார்த்தைகள்
இன்னும் எம் செவிகளில்
ரீங்காரமாய் ஒலிக்கின்றன!

கால மாற்றங்களும், கருத்து மாற்றங்களும்
நிகழ்ந்து வரும் காலகட்டத்தில் - தங்கள்
பணியின் பயனை வெளிப்படுத்துகின்றன.



சாதி மத பேதமின்றி தேவையறிந்து
உம்மையண்டி வந்தவர்க்கு
இல்லையென்று உரைக்காது
அள்ளிக் கொடுத்த வள்ளலே!
உத்தமரே! உதய சூரியனே!
அனுபவங்களின் பெட்டகமே!
தவறு நாங்கள் செய்தாலும், அவற்றை
பக்குவமாய் எடுத்துரைக்கும்
பண்பாளனே!
உம் கள்ளச் சிரிப்பாலும், கனிவான
பார்வையாலும்,
கலைநயத்திறனாலும் எம்மனதில்
நீங்காமல் நிலைத்துவிட்டீர்!

மனிதநேயத் தேரின் வடம் பிடித்து,
தரணியெங்கும் வலம் வந்த
தன்னிகரில்லா தந்தையே!
அன்பனே! நண்பனே!
நீர் இம்மானிலத்தை விட்டு மறைந்து
ஓராண்டுகள் முடிந்திடினும்
ஞாலம் மறந்திடுமா? உம் சேவை தனை!

***தந்தையே உமது ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டுகிறோம்!***

**சமூக உளவளத்துணையாளர்கள்,**
மன்னார்.

# சேவையின் நினைவுகள் அலைகளாக...

துன்ப அலைகளில்
துவண்டு போன
துரும்புகள் ஆனோம் – நாம்!
மறக்க முயலுகின்றோம்
மனதின் உணர்வுகளை
கடக்க முடியாத
துன்பத்தின் அலைகள்
அடக்க முடியாமல்
ஆர்ப்பரிக்கின்றன!

எம் எண்ணங்களில்
வண்ணம் இல்லை
மறைந்து போன
உம் நினைவுகள்
எம் இதயத்தைப்
பந்தாடுகின்றன!



கருகும் எம் நிலை கண்டு
கவலை என்னும் அலைகள்
கை கொட்டிச் சிரிக்கின்றன!
இருப்பினும் எம்
இதயத்து வேதனையை
எம்முள்ளே புதைக்கின்றோம்!

கலங்க வைத்தீரே – எமை
கைவீட்டுச் சென்றீரே!
நீர் தந்த நினைவுகளுடன்
வாழ்கின்றோம் இம்மண்ணில்!
உம் ஆன்மா என்றும்
இறைவனில் அமைதியுற
வேண்டுகிறோம் எந்நாளும்!

**JRS குடும்பம்**



உலகின் பனிப்பெண் என்று சொல்லப்படும் நாடு - **கனடா**

## வாழ்வை உயர்த்தும் சிந்தனைகள்

- நாவை அடக்கியவன் பேச்சாளனை விட மேலானவன்.
- நீங்கள் ஆசைப்பட்டுச் செய்யும் ஒவ்வொரு காரியங்களுக்காக அதிக நேரத்தை ஒதுக்குங்கள். அது உங்களை மேலே உயர்த்தும்.
- படகு கரையில் இருக்கும் வரை பாதுகாப்பாகத்தான் இருக்கும். ஆனால் படகு கரையில் இருப்பதற்கல்ல, பயணம் செய்வதற்கே!
- பெரிய இலட்சியங்களை விட ஒரு சிறிய நற்செயல் மேலானது.
- பயணம் தொடங்கும் முன் பாதையை முடிவு செய்து கொள்ள வேண்டும்.
- காற்று மணல் தூள்களைச் சிதறடிக்கும். அவை ஒன்று சேர்ந்து மலையானால் புயலாலும் அசைக்க முடியாது.
- சிறந்த தலைவர்கள் எப்படி செய்வது என்பதை செய்து காட்டி முன்மாதிரிகையாக விளங்குவார்கள்.
- கடினமாக உழைப்பதை விட திறமையாக உழைப்பது நல்லது.
- குனிவது நிமிர்வதற்குத் தான், விழுவது எழுவதற்குத் தான்.
- எல்லாவற்றிற்கும் அன்பாக மென்மையாக நன்றி தெரிவியுங்கள்.
- உங்கள் நண்பர் உங்களுக்கு எதுசெய்தால் பிடிக்காதோ அதை உங்கள் நண்பருக்கு நீங்கள் செய்யாதீர்கள்.
- பகைவனை வெல்வது பாதி வெற்றி தான். அவனை அன்பால் நண்பனாக்கிக் கொள்வது தான் முழு வெற்றி.
- துன்பம் வரும் போது தான் ஒருவனுக்குத் தன் அடையாளம் தெரிகிறது.
- அரியவராய் இருங்கள் எளியவராய் செயற்படுங்கள்.
- சீக்கிரம் மன்னிப்பு கேளுங்கள். மெல்லக் கோபப்படுங்கள்.
- உங்களிடமுள்ள சிறந்ததை உலகிற்கு கொடுங்கள். உலகம் சிறந்ததை உங்களுக்குக் கொடுக்கும்.
- முடிந்தவரை முடியாது என்று சொல்லாதீர்கள்.

## Proverbs - பழமொழிகள்

- From each according to his abilities to each according to his needs.
  திறமைப்படி பெறு, தேவைப்படி கொடு.
- Far from eye, far from heart.
  கண்ணிற்கு எட்டாவிட்டால், இதயத்திற்கும் எட்டாது.
- While the discreet advise, the fool does his business.
  விவேகம் எச்சரிக்கும், அவிவேகம் செயற்படும்.
- Give neither advice nor salt till you are asked for it.
  உப்பையும், அறிவுரையையும் கேளாமல் தராதே.
- It is hard to follow good advice than to give it.
  நல்ல அறிவுரை கொடுப்பது எளிது, அதன்படி நடப்பது அரிது.
- A merry heart makes a cheerful countenance.
  அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- Sword of common sense, our surest gift.
  பகுத்தறிவுக் கூர்வாள் பலன் தரும் கொடையே.
- Compromise anything for a quiet life.
  அமைதியாக வாழ எதையும் விட்டுக் கொடுக்கலாம்.
- Skill and confidence are an unconquered army.
  திறமையும், நம்பிக்கையும் வெல்ல முடியாத படை.
- Little things are great to little man.
  அற்ப மனிதர்களுக்கு அற்ப விடயங்களே பெரியவை.
- Conversation makes a ready man.
  உரையாடல் ஒருவனை ஆயத்த மனிதனாக்கும்.
- The submitting to one wrong brings another.
  ஒரு தவறுக்கு அடிபணிந்தால் மற்றொன்றைக் கூட்டி வரும்.
- Equality is the primordial condition of liberty.
  சமத்துவம் சுதந்திரத்தின் மூலத் தத்துவம்.
- In doing we learn.
  செய்வதில் நாம் கற்கின்றோம்.
- We walk by faith, not by sight.
  நாம் நடப்பது நம்பிக்கையால், பார்வையால் அன்று.
- Mere wishes are silly fishes.
  வெறும் ஆசைகள் முட்டாள்த்தனமானது.



நடக்கத்தெரிந்த ஒரே பூச்சி - வெட்டுக்கிளி

## பொது அறிவு போட்டா போட்டி – 32

1. பாம்புக்கு அடிக்கடி வரும் நோய் என்ன?
2. சாரண இயக்கத்தைத் தொடங்கியவர் யார்?
3. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூ எது?
4. பசுபிக் கடலையும், அத்திலாந்திக் கடலையும் இணைக்கும் கால்வாய் எது?
5. பார்வையற்ற பிரபல ஆங்கிலக் கவிஞர் யார்?
6. கண்களினால் வியர்வையை வெளியேற்றும் உயிரினம் எது?
7. முதன் முதல் செவ்வாய்க்கு விண்கலம் அனுப்பிய நாடு எது?
8. அதிக ஞாபக சக்தி கொண்ட விலங்கு எது?
9. நீல் ஆம்ஸ்றோங் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   A. அமெரிக்கா B. ரஷ்யா
   C. ஜேர்மனி D. இத்தாலி
10. பொது நூலகங்கள் அதிகம் உள்ள நாடு எது?
   A. ரஷ்யா B. சீனா
   C. இந்தியா D. அமெரிக்கா


### பொது அறிவு போட்டா போட்டி – 31 விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆபிரிக்கா | 6. | பென்சிலின் |
| 2. | தங்கம் | 7. | புறா |
| 3. | இரத்மலானை | 8. | முதலை |
| 4. | 36.8°C | 9. | இறப்பு ஏற்படும் |
| 5. | கண் | 10. | 29 கி.மீ |

*8 மதிப்பெண்களைப் பெற்று பரிசு பெறுபவர்:*
**து. சுதர்சன்,** தரம் - 6, தோட்டவெளி.

**விடைகளை எழுதும் போது சரியான விடையை மாத்திரம், தெளிவாக எழுதி அனுப்புங்கள். உங்கள் பெயர், தரம், மாவட்டம் என்பனவற்றையும் தவறாமல் எழுதி அனுப்புங்கள்.**

## கண்களைப் பாதுகாருங்கள்



கண்களின் எந்தச் சீர்கேடுகளானாலும் கண்களைக் கசக்கக்கூடாது. அப்படி ஏதும் கண்களில் ஏற்பட்டால் மெல்லிய சுத்தமான கொட்டன் துணியை, சிறிதளவு நீரில் தூய மஞ்சள் கலந்து அதில் துணியை நன்றாக நனைத்து, ஈரம் போக காயவைத்து, கண்களை அந்தத் துணியினால் அடிக்கடி துடைக்கலாம். விரல்களினால் கண்களைத் தொடுவதையோ கசக்குவதையோ தவிர்க்கவும்.

## விடுகதையும் விடையும்

1. ஒன்பது பிள்ளைகளுக்கும் ஒரே குடுமி. அது என்ன?
2. காட்டில் தொங்கும் பொட்டலத்துக்கு காவலர்கள் ஏராளம். அது என்ன?
3. நடக்க முடியாதவன், நகராமல் இருக்கமாட்டான், அவன் யார்?
4. மழை வராத நேரத்திலும் மங்கம்மா குடைபிடிக்கிறாள். அவள் யார்?
5. பார்வைக்கு அழகானவள், பாம்புக்குப் பகையானவள். அவள் யார்?

**சி. கயூபன்,** இடைக்காடு.

6. ஆகாயம் போனதும் செட்டையை விரிக்கும், ஆயிரம் முட்டைகள் அங்கேயே இட்டிடும், அது என்ன?
7. ஆண்டுக்கு ஒருமுறையாயினும் அழகாகவே வருவாள். அவள் யார்?
8. ஆனை விரும்பும், சேனை விரும்பும், அடித்தால் வலிக்கும், கடித்தால் இனிக்கும். அது என்ன?
9. படபடக்கும், நீர் சுரக்கும், அக்கம் பக்கம் சுழலும், அடிக்கடி மூடித்திறக்கும் அது என்ன?
10. வலை பின்னியவன் கடலுக்குப் போகாமலேயே மீன் பிடிப்பான். அவன் யார்?

**சி. மகேஸ்வரி,** சிதம்பரபுரம்.

### விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளி | 6. | தென்னை |
| 2. | தேன் கூடு | 7. | நாட்காட்டி |
| 3. | கடிகாரம் | 8. | கரும்பு |
| 4. | காளான் | 9. | கண் |
| 5. | மயில் | 10. | சிலந்தி |

## அன்னாசி

அன்னாசிப்பழம் என்று நாம் எல்லோரும் வழக்கத்தில் சொல்கின்றோம். ஆனால் உண்மையில் அது பழமல்ல. பல மலர்கள் சேர்ந்த ஒரு கொத்துத்தான் அது. அன்னாசி பூக்கும், கனி தருவதில்லை. இதற்கு விதையும் கிடையாது. தலைப்பகுதி சிறு இலைக் கொத்தைக் கிள்ளி நட்டுத்தான் இது வளர்க்கப்படுகிறது. பலாச்சுளை கூட பல பூக்களின் தொகுப்பு என்பர்.





புத்த சரித்திரம் என்ற நூலின் ஆசிரியர் - அசுவகோசர்

# வறுமையை ஒழிக்க சேவை செய்வோம்!

ஒரு நந்தவனத்துக்குள் நுழைந்த வண்டு அழகாகப் பூத்து நின்ற ஒரு ரோஜா மலரில் போய் அமர்ந்து தேனருந்த ஆரம்பித்தது.

இதைக் கண்ணுற்ற அன்றலர்ந்த ரோஜா ஒன்று சிரித்தது.

வண்டு ரோஜாவின் மமதை சிரிப்பின் அர்த்தம் விளங்காமல் விழித்தது.

"ஏ வண்டே! நாங்கள் உனக்குத் தேன் கொடுக்க வில்லையென்றால் பட்டினியால் செத்துவிடுவாயே என நினைத்தேன், சிரிப்பு வந்தது." என்றது ரோஜா.

அதற்குத் தென்றல் "நான் குளுமையாக உன்மீது வீசுவதால்தான் நீ மலர முடிகிறது. இல்லையெனில் நீ சோர்ந்து போவாய்" என மலரைப் பார்த்துச் சொன்னது.

அதற்கு மேகம் "நான் நீரைக் கொடுத்தால் தான் நீ உயிரோடு இருக்க முடியும்" என்றது. இவை அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த வண்டு,

"ஏ மலரே! நான் உன்னில் தேனருந்தினால்தான் உன் சந்ததியே உருவாகிறது. வீண் மமதை உனக்கு வேண்டாம்" என்றது.

சூரியன் ஓஹோவெனச் சிரித்துச் சொன்னான் - "நான் இந்த உலகத்தையே காப்பவன். நான் இயங்கினால்தான் மழை பெய்து உலகம் செழிக்கும். நீயும் உன் சந்ததியாரும் என்னிலிருந்து சக்தியைப் பெற முடியும் என்றது.

அடுத்து தென்றல், அதிகமாக நீ பேசினால் நான் சூறாவளியாகி உன் வம்சத்தையே அழித்து விடுவேன் என்றது.

எனக்கு கோபம் வந்தால், மற்ற வண்டுகளிடம் சொல்லி இனப் பெருக்கமே இல்லாமல் செய்து விடுவேன் என்றது வண்டு.

என்னை இழிவுபடுத்தினால், மழையை அதிகமாக பெய்வித்து உன் சந்ததிகளைக் கடத்திச் சென்று கடலில் தள்ளிவிடுவேன் என்றது மேகம்.

எனக்குக் கோபம் வந்தால், என் கண்களாலேயே உங்களை சுட்டெரித்து சாம்பலாக்கி விடுவேன் என்றது சூரியன்.

ஒன்றுக்கொன்று வெகு வேகமாக சண்டையிட ஆரம்பித்தது.

இவற்றை மிகவும் அதிகமாகக் கேட்டுக் கொண்டிருந்த பூமி தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டது.

சண்டையை சட்டென நிறுத்திய அனைத்தும் பூமியை நோக்கிப் பார்த்தன.

ஏன் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கிறீர்கள்? நான் கூட தான் ஆணிவேரை என்மீது கட்டிக் கொண்டு, உங்களை நோக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். நானும் உங்களை மாதிரி சண்டையிட்டு, எனக்குக் கோபம் வந்தால் இரண்டாகப் பிளந்து, உங்களையெல்லாம் விழுங்கி விடுவேன் என சண்டையிடலாம். அப்போது இந்த உலகமே அழிந்து போகும்.

அனைத்தும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன.

நாம் இந்த உலகத்தில் வாழ்கிறவரை மற்றவர்களுக்கு நன்மை செய்ய நம்மைத் தியாகம் செய்ய வேண்டும்.

உலகில் ஒன்றுமே தனித்து இயங்க முடியாது. அனைவரும் ஒன்று சேர்ந்து இயங்கினால்தான் ஒரு பொருளைச் செய்ய முடியும்.

அனைத்தும் வெட்கத்தினால் தலை கவிழ்ந்து கொண்டன.

நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த உலகில் பசுமைப் புரட்சி செய்து, இங்குள்ள வறுமையை ஒழிப்போம். என்ன சொல்கிறீர்கள்? என்றது பூமி.

அனைத்தும் ஒன்றுக்கொன்று கைகோர்த்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டன.

# ආසයි මම හරි ආසයි



ආසයි මම හරි ආසයි
පිපිච මලක් වගෙ වෙන්නට
මා ගැනවත් හිතන්නැතිව
හැම දෙනාට සුවඳ දෙන්න

ආසයි මම හරි ආසයි
කුඩයක් වගේ උහුලන්නට
අව්ව වැස්ස තකන්නැතිව
හිසට උඩින් සෙවන දෙන්න

ආසයි මම හරි ආසයි
වතුර පිරුණු විලක් වෙන්න
ලෝභ කමක් හිතන්නැතිව
පිපාසයට වතුර දෙන්න

ආසයි මම හරි ආසයි
හිරු වාගේ බැබලෙන්නට
වෙනස්කමක් කරන්නැතිව
කාටත් සේවය කරන්න


මධුරි ප්‍රියංකා ත්‍රිකුණාමලය.

வாழ்க்கையின் நோக்கம் அறிவு மட்டுமல்ல.
செயலும் தான்!



சதுப்பு நிலங்களின் அரசன் என்று கூறப்படும் உயிரினம் - முதலை

# திமிங்கலம் விசுறுவது ஏன்?



திமிங்கலங்கள் மீன் வர்க்கமல்ல. அது விலங்கினத்தைச் சேர்ந்தது. சூடான இரத்தத்தை உடைய பிராணிகள் அவை. தனது குட்டிகளை முட்டையில் இருந்து பொரிக்காது. மாறாக பெற்றெடுக்கின்றது. அக்குட்டிகள் தன் தாயின் பாலை மற்ற மிருகங்களைப்போல் பருகுகின்றன. திமிங்கலங்கள் மற்றய நீர்ப்பிராணிகள் போல் அல்ல. நிலத்தில் வாழ்ந்த தமது முன்னோர்களில் இருந்து தோன்றியவை. அதன் காரணமாக அவை நீரில் வாழ்வதற்கு தம்மை மாற்றிக் கொள்கின்றன. இதன் கருத்து என்னவென்றால், பல கோடி வருடங்களுக்கு முன் அவற்றின் உடம்புகளில் நீரில் வாழ்வதற்கான சில மாற்றங்கள் ஏற்பட்டன.

திமிங்கலங்களுக்கு செதில்கள் அல்லாததன் காரணமாக அவை சுவாசப் பைகள் மூலம் சுவாசிக்கின்றன. அதற்கான முக்கிய மாற்றங்கள் சுவாசப் பைகளில் ஏற்படுத்தப் பட்டுள்ளதால் அவற்றின் நாசித் துவாரங்கள் தலையின் மேல் முன் பக்கத்தில் அமைந்திருக்கிறது. இவை தலையின் உச்சிப்பக்கமாக அமைந்திருக்கின்றன. இவை ஒன்று அல்லது இரண்டு ஊது துவாரமாக அமைவதால் திமிங்கலங்களுக்கு நீர் மேல் மட்டத்தில் சுவாசிப்பது இலகுவாகிறது.

நீருக்கு அடியில் இதன் நாசித்துவாரங்கள் ஒரு சின்ன வால்வால் அடைக்கப்பட்டு, வாயிலிருந்து வரும் காற்று செல்லும் வழி மூடப்படுவதால் சுவாசப்பைக்கு நீர் செல்லும் அபாயம் ஏற்படாது.

திமிங்கலங்கள் ஒவ்வொரு 05 அல்லது 10 நிமிடங்களுக்கு ஒரு முறை சுவாசிப்பதற்கு எழும்புகிறது. ஆனால் அவற்றிற்கு நீரின் கீழ் 45 நிமிடங்கள் இருக்கலாம். நீர் மட்டத்தை அடைந்தவுடன் அவை முதலாவது ஊதுகிறது. அல்லது பலவிதக் காற்றை தங்களது சுவாசப்பைகளிலிருந்து வெளியேற்றுகிறது. இப்படி செய்யும் பொழுது அவை ஒரு பெரிய சத்தத்தை வெகு தூரம் கேட்கும் படி ஏற்படுத்துகிறது. இந்த பீச்சில் அடங்குவது என்ன? நீர் அல்ல நீராவியே.

திமிங்கலத்தின் சுவாசப்பையிலிருக்கும் போது காற்று முற்றாக மாறும் வரை அநேக முறை அவை ஊதிக் கொண்டிருக்கும். அதன் பின் அவை ஆழமாக மூழ்குகிறது அல்லது ஆழப்பாய்கிறது. சில திமிங்கலங்கள் 2000 அடி ஆழம் வரை மூழ்கும் பெரிய திமிங்கலங்கள் ஆழப்பாயும் போது தமது வால்களை நீருக்கு மேல் நீட்டுவதுடன் நீருக்கு மேல் பாயவும் செய்கின்றன.

# சோம்பலை ஒழித்திடுங்கள்...!

- சோம்பல் தூக்கத்தை உண்டாக்கும். **ஸ்மித்**
- சோம்பலே தீமைக்கும், துன்பத்திற்கும் பிறப்பிடம். **ஔவையார்**
- சோம்பலின் விளைவே வறுமை. **கிப்ளிங்**
- சோம்பல் உள்ளத்தின் உறக்கம். **வாவெனார் கூஸ்**
- சோம்பேறியை யாரும் மதிப்பதில்லை. **காந்திஜி**
- சோம்பேறி காலத்தை மதிப்பதில்லை, காலம் சோம்பேறியை மதிப்பதில்லை. **காந்திஜி**

**க. கோமதி,** பேசாலை.

# திராட்சைப் பழம்



திராட்சைப்பழம் வருடத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான் கிடைக்கும்.

சாதாரணமாக திராட்சையில் பச்சை, கறுப்பு என இரு வகை உண்டு.

எல்லா வகையான திராட்சைப் பழத்திலும் விட்டமின் A உயிர்ச் சத்து அதிக அளவில் உண்டு. திராட்சையின் நிறம் கறுப்பாகத் தென்பட்டாலும், இது கருநீல நிறமுடையதாகவே இருக்கும்.

**நல்ல பசி உண்டாக.......**

கறுப்புத் திராட்சைப் பழத்தை எடுத்து, விதை தோல் நீக்கிவிட்டு, சாறாய்ப் பிழிந்து அரை டம்லர் அளவு எடுத்து சிறிதளவு சீனி சேர்த்து தொடர்ந்து ஏழு நாட்கள் அருந்திவந்தால், நல்ல பசி உண்டாகும்.

**பச்சைத் திராட்சைப் பழம்.**

உடல் உஷ்ணம் உள்ளவர்கள் அடிக்கடி பச்சைத் திராட்சைப் பழத்தைச் சாப்பிட்டு வந்தால் உஷ்ணம் தணிந்து சம நிலைக்கு வரும்.

வயிற்று வலி, வயிற்றுப் போக்கு, அஜீரணக்கோளாறு, பசி இவற்றை அகற்ற பச்சைத் திராட்சைப் பழத்தை பிழிந்து, தோல் விதை நீக்கி ஒவ்வொரு நாளும் காலையில் அரை டம்லர் அளவு அருந்தி வந்தால் வயிற்றுக் கோளாறுகள் குணமாகும்.

மேலும் தலைவலி, இருதய வீக்கம், தேக நடுக்கம் போன்றவை குணமாகி நல்ல சுறுசுறுப்பு ஏற்படும்.

எனவே திராட்சைப்பழத்தை உண்டு உடல் ஆரோக்கியத்தைப் பேணுங்கள்.



கடலின் மேல் மட்ட வெப்ப நிலை - 30°C

# இங்கிலீஸ் ரொம்ப ஈஸி - 32

## ஏற்றுக்கொள்ளாமை - Refusal

1. என்னால் வர முடியாது.
   I won't be able to come.
2. நீங்கள் விரும்புவதை என்னால் செய்ய முடியாது.
   I won't be able to do as you wish.
3. நான் வர விரும்பவில்லை.
   I don't want to come.
4. அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.
   They won't agree to this.
5. இதற்கு ஏற்பாடு செய்ய முடியாது.
   It can't be arranged.



## நம்பிக்கை - Believing

1. நீங்கள் இதை நம்பவில்லையா?
   Don't you believe it?
2. இது வெறும் வதந்தி.
   It's only a rumour.
3. இது கேள்வியுற்ற விடயம்தான்.
   It's only a hearsay.
4. அவர்களை முற்றும் நம்பியிருக்கலாம்.
   You can trust them fully.
5. எனக்கு அவன்மேல் முழு நம்பிக்கை இருக்கிறது.
   I have full faith in him.



## அன்பு / பாராட்டு - Affection/ Praise

1. நீ வீரத்துடன் பணி செய்தாய்.
   That was very brave of you.
2. உன் வேலை பாராட்டுக்குரியது!
   Your work is praiseworthy!
3. நீங்கள் மிகவும் நல்லவர்.
   You are so nice.
4. நீங்கள் எனக்கு மிகவும் உதவியாக இருந்தீர்கள்.
   You have been a great help to me.

## வேண்டுகோள் - Request

1. காத்திருங்கள் - Please wait.
2. திரும்பி வாருங்கள் - Please come back.
3. இங்கே கொஞ்சம் வாருங்கள் - Please come here.
4. அவனை எழுப்புங்கள் - Please wake him up.
5. என்னை மன்னித்துவிடுங்கள் - Please forgive me.

## உணவு - Meals

1. எனக்குப் பசிக்கிறது - I am feeling hungry.
2. நீங்கள் என்ன சாப்பிடுவீர்கள்.
   What will you like to eat?
3. சுவைத்துப் பாருங்கள் - Just taste it.
4. நீங்கள் மரக்கறி உண்பவரா?
   Are you a vegetarian?
5. எனது அம்மா நன்றாகச் சமைப்பார்.
   My mother is an expert cook.



## காலம் - Time

1. உங்களது நேரம் என்ன?
   What is your time?
2. இப்பொழுது நேரம் ஏழு மணி முப்பது நிமிடம்.
   It's half past seven.
3. காலையில் நீ எப்பொழுது எழுந்திருப்பாய்?
   When do you wake up in the morning?
4. நான் காலையில் ஆறரை மணிக்கு எழுவேன்.
   I wake up half past six in the morning.
5. நீ எப்போது பாடசாலை செல்கிறாய்?
   When do you go to school?
6. நான் காலை 7.30 மணிக்குப் பாடசாலை செல்கிறேன்.
   I go to school at 7.30 in the morning.



நாதஸ்வர இசைக்கருவியில் உள்ள துளைகள் - 12

# Question Tags - இணைப்புக் கேள்வி

துணை வினா பற்றிய வினாக்களுக்கு விடையளிக்க, சரியான துணை வினாக்கள் பற்றி அறிந்திருத்தல் அவசியம். **(To answer the question on Question Tags one has to know the right forms of the Tags.)**

ஒரு வாக்கியத்தோடு இணைக்கப்பட்ட கேள்வி உரையாடலில் ஆம், அல்லது இல்லை என்ற உறுதியைத் தேடுவது. அதன் எழுவாயாக எப்போதும் ஒரு மறு பெயரே வரும். பெயர்ச்சொல் வராது.

இணைப்புக் கேள்வி துணை வினையாகவும் அல்லது **"do"** வின் உருவாகவும் இருக்கலாம். **(The verb in the tag is either the auxiliary used in the statement or one of the proper forms of Do, Does or Did.)**

உடன்பாட்டு வாக்கியம் எதிர்மறை இணைப்புக் கேள்வியோடு வரும். எதிர்மறை வாக்கியம் உடன்பாட்டு இணைப்பக் கேள்வியோடு வரும். **(An affirmative statement takes a Negative tag and a Negative statement is followed by a positive tag.)**

சில உதாரணங்களைக் கவனியுங்கள்.



**1. உடன்பாட்டு வாக்கியம் எதிர்மறைக் கேள்வியுடன்.**
**(Positive statements with the negative tags)**

Eg: 1. நான் நலம், இல்லையா? I am healthy, are n't I?
2. நீ எழுதிவிட்டாய், இல்லையா? You have written, haven't you?
3. அவன் போய்விட்டான், இல்லையா? He is gone, isn't he?
4. அது மிகவும் அழகாய் உள்ளது, இல்லையா? It is very beautiful, isn't it?
5. நீ வருவாய், இல்லையா? You will come, won't you?

**2. எதிர்மறை வாக்கியமுடன் உடன்பாட்டுக் கேள்வி.**
**(Negative statements with the Positive tags.)**

Eg: 1. நான் வகுப்பில் உறங்கவில்லை, உறங்கினேனா? - I do not sleep in the class, do I?
2. உனக்கு சந்தேகம் இல்லை, உண்டா? - You have no doubts, have you?
3. அவனால் எப்போதும் விளையாட முடியாது, முடியுமா? - He can not always play, can he?
4. அவள் குடை எடுக்கவில்லை, எடுத்தாளா? - She did not carry an umbrella, did she?
5. படம் ஈர்க்கக் கூடியதாக இல்லை, அல்லவா? - The picture is not interesting, is it?

**3. கட்டளையைத் தொடரும் இணைப்புக் கேள்வி.**
**(After the imperatives the Question tags used are as follows)**

Eg: 1. உள்ளே வா, வரமாட்டாயா? - Come in, Won't you?
2. உப்பை எடுத்துக் கொடு, செய்வாயா? - Pass me that salt, will you? (Not negative tag)
3. நேரத்தை வீணாக்காதே, செய்வாயா? - Don't waste your time, will you?
4. நேராக நில்! முடியாதா? - Stand erect, can't you?
5. என்னை மன்னித்துக் கொள்! செய்வாயா? - Please excuse me, won't you?
6. நாம் வகுப்பைத் தொடங்குவோம்! செய்வோமா? - Let's begin our class, Shall we?

**செய்ய வேண்டியது**

ஒரு வாக்கியத்திற்கான இணைப்புக் கேள்வியை எவ்வாறு அமைப்பது என்று தெரிந்து கொண்டு நண்பர்களுடன் பேசியும், எழுதியும் பழகவும்.

## சிந்திக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்!

- எந்த மாதிரியான நடவடிக்கைகள் உங்களுக்கு உடன்பாடாக இருக்கிறதோ, அதுபோன்ற மனிதராகவே உங்களைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்!

- உங்கள் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் குறுகிய கால இலக்குகள், நீண்ட கால இலக்குகள் என்று ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இந்த இலக்குகளின் அடிப்படையில் மற்றவர்களுடன் கொள்கின்ற உறவினை சிறப்பாக்கிக் கொண்டால், மகிழ்ச்சி மிக்க மனிதராக நீங்கள் ஆகிவிடுவீர்கள்.

- நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் புதிய உருவகத்தின்படி அன்றாட வாழ்க்கையில் தனிநபர் உறவுகளை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

- இப்போதுள்ள உங்களுடைய நடவடிக்கைகளை நீங்கள் விரும்புகின்ற நடவடிக்கைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

- ஒவ்வொரு கட்டத்திலும் உங்கள் நடவடிக்கைகளில் தேவைப்படும் மாற்றங்களைச் செய்து கொள்ளுங்கள். மற்றவர்கள் உங்களிடம் நடந்துகொள்ளும் முறையிலிருந்து இதை அனுமானித்து, மாற்றங்களை உண்டாக்கிக்கொள்ள முடியும். தொடர்ந்து இதைக் கடைப்பிடித்தால் உங்களைப்பற்றி உங்களுக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படும்.

## நிஜமான சேவை!



நலமோடு நாம் வாழ,
நானிலம் எங்கும் நிமிர்ந்து நிற்க,
நிலையான வாழ்வு வாழ,
நீதியின் பால் செயற்பட,
நிறைவான சேவையே - எம்
நிஜமான வாழ்வு!

**அ. அனுஸ்கா,** யாழ்ப்பாணம்.

## தடைகளைத் தாண்டிய சேவை..!

விவசாயி போலவே நாமும் வாழ வேண்டும். விவசாயி மழை வருமா? வராதா? என்றெல்லாம் சந்தேகிக்காமல் இயற்கையையும் தன்னையும் நம்பி விதைக்கிறான். தனி மனிதனும் தடைகளையும், வசதிக்குறைவையும் எண்ணி சந்தேகம் கொள்ளாமல் நல்ல காரியங்களைச் செய்வதில், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதில், நம்பிக்கையுடன் ஈடுபட வேண்டும். சவால்களும் பிரச்சினைகளும் நாம் காரியங்களைத் தொடர்ந்து செய்வதால் மட்டுமே பின்வாங்க ஆரம்பிக்கும். புதிய வழிகளைக் கண்டுபிடிக்கவும் வழி வகுக்கும். எனவே தொடர்ந்து நம்பிக்கையுடன் செயற்படுங்கள்.

## පැසසුමක් මොනවටද සේවයක් වේවි නම්?

**හඳ -**
අහසට මං නගින්න පෙර
බිං කලුවර මට්ටු කරපු
පුංචි කුප්පි ලාම්පුවේ.......
තෙල් හිඳෙන්න ඔන්න මෙන්නණී
හරි වේගෙන් ගැස්සී ගැස්සී
වැඩිපුර එළියක් දෙන්නට
හදනා හැටි පුදුමයි........

**කුප්පි ලාම්පුව-**
අහස මුදුනෙ බැබළී බැබළී
තරු වට කරගෙන ඉන්නා
සුදු මුදු පුන් සඳේ......
පුංචි පැලේ ඝණ අඳුරයි
ඔබේ එළිය දුර ඈතයි
අන්තිම තෙල් බිංදුව තෙක්
මගෙ ආලෝකය විතරයි

**හඳ -**
සුදු සඳ රැස් වැද දිලිසෙන
ලෝකය දකිනා හැම දෙන
මා ගැන මිස ඔබ ගැන නෑ
කතා කරන්නේ.......

**කුප්පි ලාම්පුව -**
පුංචි පැලට එළිය ගෙනන
ඒ යුතුකම මගෙ සේවය
මියෙන තුරා කරනෙම් මම....
පැසසුම් මොකටද මා හට?

**එම්. නිලක්ෂිකාණී මධුකන්**

## சேவையைப் புரிந்திடுங்கள்!



சிறியோருக்கு கனிவாகவும்,
முதியோருக்கு பரிவாகவும்,
துன்பப்படுபவர்களுக்கு அனுதாபமாகவும்,
பலவீனமானவர்களுக்கு பாசத்துடனும்,
பகைவர்களுக்கு பாங்கோடும்,
எளியோருக்கு அன்பாகவும்,
வறியோருக்கு வாஞ்சையுடனும்,
நலிந்தோருக்கு நல்மனதுடனும்,
புரிந்திடுங்கள் சேவையினை புவிதனிலே!

**தி.தர்ஷிகா,** கிளிநொச்சி.

## நல்வாழ்வுக்கான எட்டு வழிகள்

1. நல்லதை **நினை**
2. நல்லதைப் **பேசு**
3. நல்லதைச் **செய்**
4. நல்வாழ்க்கை **வாழ்**
5. முன்னேற **முயற்சி செய்**
6. பயனுள்ள **வாழ்கை வாழ்**
7. நல்ல **சிந்தனை செய்**
8. நல்ல **தியானம் செய்**



பல்லியின் விஷம் உள்ள உறுப்பு - **தோல்**

# விஞ்ஞான விளையாட்டு - 13

## நீர் மட்டம் உயராது



**தேவையான பொருட்கள் :** கண்ணாடிப் போத்தல்
கண்ணாடிக் குவளை
நீர்

**செய்முறை:** கண்ணாடிப் போத்தலில் அதன் விளிம்புவரை நீரை நிரப்ப வேண்டும். அதன் மீது கண்ணாடிக் குவளையைக் கவிழ்த்து வைக்க வேண்டும். இப்போது இரண்டையும் உறுதியாகப் பிடித்துக் கொண்டு கண்ணாடிப் போத்தலை தலைகீழாகக் கவிழ்க்க வேண்டும்.

சிறிது நீர் கண்ணாடிக் குவளையுள் சிந்தக்கூடும். பின்னர் கண்ணாடிப் போத்தலை இரண்டு அங்குல உயரத்திற்குத் தூக்க வேண்டும். போத்தலில் இருந்து கண்ணாடிக் குவளைக்கு நீர் வரும். ஆனால் நீர் மட்டம் போத்தலின் வாயை எட்டியதும் நின்றுவிடும்.

மேலும் இரண்டு அங்குலத்திற்கு போத்தலைத் தூக்கினாலும் இவ்வாறே நடக்கும்.

**காரணம் :** போத்தலை உயர்த்தும் போது அதற்குள் காற்று புகுந்து நீரை வெளியேற்றுகிறது. நீர் மட்டம் போத்தலின் வாயை அடைந்ததும் போத்தலுக்கு வெளியே உள்ள காற்று கண்ணாடிக் குவளையில் உள்ள நீரின் மீது அழுத்தி போத்தலில் இருந்து நீர் வெளிப்படுவதைத் தடுக்கிறது.

# கடவுளுக்காகவா? மனிதனுக்காகவா?



தொழு நோயாளிகள் வாழும் இல்லம் அது. அன்னை தெரேசா ஒவ்வொரு தொழுநோயாளியிடமும் சென்று அவர்களது புண்களைக் கழுவி சுத்தம் செய்து மருந்து தடவிக் கொண்டிருந்தார். ஒரு பணக்காரர் அங்கே வந்தார். அன்னையின் செயலைக்கண்டு வியப்புடன், எனக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தால் கூட நான் இந்த வேலையைச் செய்ய மாட்டேன் என்றார். அதற்கு அன்னை தெரேசா, எனக்கு இலட்ச ரூபாய் தந்தாலும் நான் இதைச் செய்யமாட்டேன் என்றார். பிறகு ஏன் இதைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்? என்று அந்தப் பணக்காரர் கேட்டார். இறைவன்பால் நான் கொண்டுள்ள அன்பு இதைச் செய்ய வைக்கிறது என்றார் அன்னை.

அதுவரை அன்னை தெரேசா மருந்திட்டுக் கொண்டிருந்த தொழு நோயாளி உடனே எழுந்தான். அன்னை வியப்புடன் அவனைப் பார்த்தார். தொழுநோயாளி கூறினான், அம்மா நீங்கள் என் மீது அன்பு கொண்டுதான் எனக்கு மருந்திடுகிறீர்கள் என்று இதுவரை நினைத்தேன். இப்பொழுதுதான் என் மீது உங்களுக்கு அன்பில்லை என்று தெரிகிறது என்றான்.

அன்னை தெரேசாவிற்கு அப்போது தான் ஞானம் பிறந்தது. நோயாளிக்கு அன்பு காட்டுவதன் மூலம் கடவுளுக்கு அன்பு காட்டலாம். கடவுளுக்கு அன்பு காட்டுவதன் மூலம் நோயாளிக்கு அன்பு காட்ட முடியாது என்பதை அன்னை அன்றுதான் நன்கு உணர்ந்து கொண்டார்.

அந்த அன்னையின் அன்புப் பணிகளை நாம் மறந்திருக்க வாய்ப்பில்லை. கடவுளின் சாயலை கஷ்டப்பட்ட ஒவ்வொரு மனிதனின் உருவிலும் கண்டு மகிழ்ந்தார் அன்னை தெரேசா.



பூமியின் ஒரே துணைக்கோள் - சந்திரன்



# அண்ணல் அருப்பே

Fr. ஜெரி

பேதுரோ அருப்பே கத்தோலிக்க திருச்சபையின் இறை மக்களுக்கான நற்செய்திப் பணி அமைப்பின் ஒரு முதன்மை அங்கத்தினராக நியமிக்கப்பட்டார்.

மேலும் தென் அமெரிக்கா பற்றிய பாப்பிறைக் குழுவினிலும் அங்கத்தினராக்கப்பட்டார். உரோமையிலிருக்கும் கிரகோரியன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பொறுப்பேற்றார். மேலும் உரோமையிலேயே இருக்கும் விவிலிய நிறுவனத்திற்கும், பன்மை மொழி ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் கூட துணைவேந்தராக்கப்பட்டார்.

இவைகளுக்கெல்லாம் மேலாக கத்தோலிக்கத் திருச் சபையிலிருக்கும் அனைத்து துறவற இயக்கங்களின் தலைவர்களின் பேரவையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதுவும் ஒருமுறை இரண்டுமுறை மட்டுமல்ல!

1967 ஆம் ஆண்டு முதல் 1970, 1973, 1979 என தொடர்ந்து ஐந்து முறைகள் தலைவர் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டு, 1982 அப்பேரவையிலும் பணியாற்றினார்.

மேற்கண்ட அனைத்துப் பணிகளையும் அகில உலக இயேசு சபையின் பொதுத் தலைவராக இருந்து கொண்டே மேற்கொண்டார்.

ஏனெனில் பொதுத்தலைவராக இயேசு சபையில் தெரிவு செய்யப்பட்டுவிட்டால் அப்பொறுப்பினை ஒருவர் ஆயுட்காலத்தின் இறுதிவரை ஏற்று பணியாற்றுவார்.

பேதுரோ அருப்பேவைப் பொறுத்தவரை பணிகளும், பொறுப்புக்களும் அவரது மனித நேயத்தையும், இலட்சியத்தையும் மேலும் கூர்மைப்படுத்தவே பயன்பட்டன.

இவ்வளவு பொறுப்புக்களுக்குமிடையே பல்வேறு சிந்தனை மடல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் வரைந்திருக்கிறார் என்றால், அது அவருக்குள்ள பேராற்றல் என்றே கூறலாம்.

1967, 1969, 1971, 1974, 1977, 1980 ஆகிய ஆண்டுகளில் உரோமையில் நடந்த கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர்களது பேரவையில் சிறப்பு அங்கத்தினராகப் பங்கெடுத்து புரட்சிகரமான கருத்துக்களை வழங்கியிருக்கிறார். 1971 ஆம் ஆண்டு பேரவையின் போது அவர் வலியுறுத்திப் பேசிய சிந்தனைதான் இது :

*' நீதிக்காக உழைப்பது*
*உலகை மாற்றுவதற்காகப் பாடுபடுவது*
*ஏழையர்களோடு தோள் கொடுத்துப் போராடுவது. .*
*இவையாவும் இயேசுவின் நற்செய்தி அறிவிப்பின்*
*இன்றியமையாத அம்சமாகும்.*
*மனித வர்க்கத்தைத் துன்புறுத்தும்*
*அனைத்து அடிமைத்தனங்களிலிருந்தும்*
*மனித இனம் விடுதலை பெற*
*உழைப்பதே திருச்சபையின் கடமையாகும்.*
*அதுவே இறைவனுக்கு ஒரு மாதம்*
*செய்யும் உரிய வணக்கமாகும்.'*

இவ்வாறாக தீவிரமாகப் பேசியதற்காக பேதுரோ அருப்பே சில சிரமங்கள் நிறைந்த தருணங்களையும் சந்திக்கவேண்டியிருந்தது.

பெரும் அமைப்புக்களுடனும் நீண்டதொரு பாரம்பரியத்துடனும் நுண்ணிய சட்டதிட்டங்களுடனும் செயற்படும் கத்தோலிக்கத் திருச்சபையின் சில பெரியவர்களும் பேராயர்களும் பேதுரோ அருப்பேவைக் கடுமையாக விமர்சனம் செய்ய ஆரம்பித்தனர்.

அதுமட்டுமல்ல அவர் பிறந்த ஸ்பெயின் தேசம் போன்ற மேற்கத்தேய சில நாடுகளிலுள்ள சில இயேசு சபை அங்கத்தினர்களும் கூட பேதுரோ அருப்பேவின் புதுமையான நோக்கத்திற்கும், நடைமுறைக்கும் ஆதரவு தருவதை நிறுத்திக் கொள்ளத் தொடங்கினர்.

பெருந்தன்மையுடன் பேதுரோ அருப்பே, அவர்களைத் தாமே சந்தித்து, "மாறிக் கொண்டிருக்கும் உலகத்தில் வாழும் துறவிகளாகிய நமக்கும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன...." என விளக்கங்களுடனும், விவரங்களுடனும் பொறுமையுடனும் எடுத்தியம்பினார்.

இதன் விளைவாக எதிர்க்க ஆரம்பித்த சிலர், பேதுரோ அருப்பேவின் புதிய போக்கினை ஆதரிக்கலாயினர். எனினும் , பேதுரோ அருப்பேவின் துணிவான இலட்சியப் பாதையில் தடைக்கற்களை நிறுத்தி சிரமங்களை வருவித்தவர்கள் இறுதிவரை இருக்கத்தான் செய்தார்கள்.

ஆனாலும் "இடுக்கண் வந்தால், நகுக" எனும் பாங்குடன் பயணத்தைத் தொடர்ந்தார் பேதுரோ அருப்பே!


1971 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி அமெரிக்கா சென்றிருந்த பேதுரோ அருப்பே, நியூயோர்க் நகரிலிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அன்றைய பொதுச் செயலாளர் மாண்புமிகு யூதாண்ட் அவர்களைச் சந்தித்து பின்வரும் அறிக்கையினை வெளியிடுகின்றார்:

*'மனித சமூகத்தின் ஒற்றுமையையும்*
*பாசம் நிறைந்த பிணைப்பையும் குலைக்கும்*
*சமுதாய, பொருளாதார, அரசியல், கலாசார,*
*சித்தாந்த அமைப்புக்களையும் தகர்ப்போம்.*
*இவ்வகையில் ஐக்கிய நாடுகளின், சபையின்*
*பணிகளுக்கு இயேசு சபையினர் என்றென்றும்*
*உறுதுணையாக இருப்பார்களென*
*உறுதி தருகிறேன்.*
*இத்திருப்பணி மேலும் முடுக்கிவிடப்படுவதற்காக*
*ஆராய்ச்சிகளை மேற்கொள்ளத் தக்கதொரு*
*அமைப்பு ஒன்றினை இயேசு சபையினர் நிறுவிடுவர்.'*

தொடரும்.......



மாட்டின் லூதர் கிங் நோபல் பரிசு பெற்ற ஆண்டு - 1964



# வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்

ஓர் ஊரில் குப்பன் என்ற வேலைக்காரன் இருந்தான். நன்கு பேசும் திறமை கொண்டிருந்த அவன் ரோசக்காரனாகவும் விளங்கினான்.

அந்த ஊரில் இருந்த செல்வன் என்ற ஒருவனுக்குத் தேங்காய் தேவைப்பட்டதும், யாரை விட்டுத் தன் வீட்டுத் தென்னை மரத்தில் தேங்காய் பறிப்பது என்று சிந்தித்தான்.

அப்பொழுது அந்த வீதி வழியாகக் குப்பன் சென்று கொண்டிருந்தான்.

அவன் இயல்பை அறியாத செல்வன், "குப்பா மரத்தில் ஏறித் தேங்காய் பறித்துப் போடுகிறாயா?" என்று கேட்டான்.

"போடுகிறேன்" என்று குப்பன் மரத்தில் ஏறினான்.

தனக்கு ஒரு காய், மரத்தில் ஏறிய இவனுக்குக் கூலி ஒருகாய் என்று நினைத்த செல்வன் "இரண்டு காய் போதும்" என்று குரல் கொடுத்தான்.

ஆனால் குப்பனோ நன்கு முற்றியிருந்த ஐந்து தேங்காய்களைக் கீழே தள்ளிவிட்டு இறங்கினான்.

"இரண்டு காய்கள் போதும் என்றேனே, எதற்காக ஐந்து காய்களைத் தள்ளினாய்?" என்று கோபத்துடன் கேட்டான் செல்வன்.

அதற்குக் குப்பன், "ஏற ஒன்று, இறங்க ஒன்று. நீ கூலியாகக் கொடுத்த ஒன்று. தானாக எடுத்துக் கொண்டது ஒன்று. மீதும் ஒரு காய் உள்ளது. அதை நீயாகத் தந்தால் தா. இல்லையேல் நானே எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, ஐந்து தேங்காய்களையும் தூக்கிக் கொண்டு புறப்பட்டான்.

என்ன பேசுவது என்று தெரியாமல் வாயடைத்து நின்றான் செல்வன்.

**இ.வருஷா,** யாழ்ப்பாணம்.



*தீபா* : நான் புதுசா ஒரு கவிதை எழுதினேன்.

*நிஷா* : எதை வைத்து எழுதினாய்?

*தீபா* : எனது பேனாவை வைத்துத்தான்...!

**உ.டிலோஜினி,** வவுனியா.



*ராமு* : இவரமாதிரி ஒரு சுறுசுறுப்பான ஆள பார்க்கவே முடியாது..!

*வினோ* : ஏன்?

*ராமு* : வேலைக்கு விண்ணப்பிக்க முதலே, இடமாற்றத்திற்கு விண்ணப்பிச்சுட்டார்!

**க.மயூரன்,** கந்தளாய்.



*லதா* : கழுதைக்குப் பிடித்த ரொட்டி எது?

*மீனா* : தெரியலயே...!

*லதா* : சுவரொட்டி தான்...!

**ஜே.மெடோனா,** மன்னார்.



**நேர்ஸ்** : ஆப்பரேசன் தியட்டர்ல உள்ள போன்ல கை வைக்காதீங்க என்று சொன்னேனே டாக்டர்! ஏன் கை வைச்சீங்க?

**டாக்டர்** : ஏன்?

**நேர்ஸ்** : அதுவும் செத்துப் போச்சு....!

**ச.றோஸ்மலர்,** மட்டக்களப்பு.



**ஆசிரியர்** : ஏன் லேட்டா வந்தாய்?

**மாணவன்** : இல்ல சேர்...."பள்ளி அருகில் உள்ளது மெதுவாகச் செல்லவும்" என்று போட் போட்டிருந்தது. அதனால்தான் சேர் லேட்டா வந்தேன்.

**எ.கிருஸாந்தி,** முல்லைத்தீவு.



*மகன்* : அப்பா நீங்க இருட்டில் கையெழுத்து வைப்பீங்களா?

*அப்பா* : ஆமா.

*மகன்* : இப்ப நான் லைட்ட ஆப் பண்ணுறன் என் ஸ்கூல் புறோகிறஸ் றிப்போட்ல கையெழுத்து வைங்க பாப்பம்..?

**அ.மிருணா,** ஆனைக்கோட்டை.



**நோயாளி** : ஒப்பரேஷன் என்றாலே பயமா இருக்குது டாக்டர்.....

**டாக்டர்** : நான் இருக்கிறபோது என்ன பயம்?

**நோயாளி** : நீங்க இருப்பீங்க, நான் இருப்பேனா என்றுதான் எனக்குப் பயம்..!

**த.பிரியதர்ஷினி,** தம்பலகமம்.

# சேவை செய்து வாழ்வோம்!

பலனை எதிர்பாராது மனிதனால் ஆற்றப்படும் தொண்டுகள் சேவைகள் எனப்படும். சேவை செய்யும் மனம் எம்மிடம் இல்லையெனில் நாம் வாழ்வதில் அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

மனித சமுதாயத்தில் தன்னலத்தை விரும்பாது பிறருக்காக சேவை செய்யும் வர்க்கத்தைக் கணக்கிட்டால் ஒரு சில இலட்சங்களுக்குள் அவர்களை அடக்கி விடலாம். ஆனால் சேவை பெறும் வர்க்கமோ பலகோடிகள்.

உலகில் வாழ்ந்த உத்தமர்களுள் இயேசு சபை அகதிப்பணியின் ஸ்தாபகர் அண்ணல் பேதுரு அருப்பே அடிகளாரும் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

சர்வதேச ரீதியாக இல்லிடங்களையும், உடமைகளையும், தொழில் வளங்களையும் இழந்து நிர்க்கதியான அகதிகளுக்கு மூலைக்கல்லாக விளங்கியவர்தான் பேதுரு அருப்பே அடிகளார்.

தாதியர் சேவைக்கு மூலைக்கல்லாக திகழ்ந்தவர் புளோரன்ஸ் நைற்றிங் கேள் அம்மையார்.

சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு அநாதரவான முதியோரையும், வறியோரையும், அங்கவீனர்களையும் அன்புடன் அரவணைத்து பராமரிக்கும் சேவைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அன்னை தெரேசா.

இவர்கள் போன்று இன்னும் அநேக சமூக சேவையாளர்கள் காலத்திற்கு காலம் உலகில் தோன்றி மறைந்துள்ளனர்.

பல விஞ்ஞானிகள், கல்விமான்கள் கூட இதில் விதிவிலக்கிற்கு உட்பட்டவர்கள் அல்லர். அவர்கள் செய்த சேவை, மருத்துவம், விஞ்ஞானம் கைத்தொழில் துறைகள் அடங்கலாக இன்னும் எத்தனையோ துறைகளில் பரிணமிக்கின்றது.

எனவே நாம் ஒவ்வொருவரும் பிறர்நலம் கருதி, ஒவ்வொரு மனிதனும் என் நண்பன் என்ற எண்ணத்துடன் சேவை செய்ய முன்வர வேண்டும். நாம் சமுதாயத்திற்கு என்ன செய்கின்றோம்..? எமது கடமைகளை உற்சாகத்துடன் செய்கின்றோமா? நேரம் தவறாமை, ஒழுக்கம் போன்ற நற்பண்புகளை கடைப்பிடித்து சேவை செய்கின்றோமா? முன்மாதிரியாக இருக்கின்றோமா? என்று சற்று சிந்தித்து செயற்படுவோம்.

**ம.யோ. அருள்நாதன்**
அளம்பில், முல்லைத்தீவு.

நிதானமாக ஆலோசியுங்கள். ஆனால்
துணிவுடன் செயற்படுங்கள்.

# உனது சேவையால் மகிழ்ந்த நாம்....!

அகதி முகாமில் இருந்த எமக்கு
அறிவை ஊட்டி எமை ஆளாக்கி,
அனைத்துமிழந்து வந்த எம்மை
அன்புடன் அரவணைத்தாயே!

கல்வியிழந்து வந்தோம்,
கலைகளையும் மறந்தோம்,
கனிவோடு கல்வியுடன்,கலைகளையும்
கருத்துடன் எமக்கு புகட்டினாயே!

இன்பமாய் நாம் வாழ்ந்திட,
இனிதான சேவைகள் பல செய்திட்டாயே!
இயேசு சபை அகதிப்பணியே!
இதமான சேவைக்கு எமது வாழ்த்துக்கள்!

**இ.ரகுவரன்,** தரம் - 8,
பதுளை வீதி, காயன்குடா.

# தொடர் மொழிக்கு ஒரு மொழி

1. நிகழ்ச்சி ஒன்றைப் பலர் அறிய முதன் முதலாக மேடையேற்றுவது
**அரங்கேற்றம்.**
2. ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்
**அட்டவதானி.**
3. நிகழ்ச்சி ஒன்றை மேடையேற்றுவதற்கு முன்னர் சரிபிழை பார்த்துத் திருத்துவது
**ஒத்திகை.**
4. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும்
**ஐம்பொறி.**
5. நிலம், நீர், தீ, ஆகாயம், வளி ஆகிய ஐந்தும் -
**ஐம்பூதம்.**

**ம.பிருந்தா,** கற்குளம்.

# கடல்களில் மலைகள் உண்டா?

ஏராளமான மலைகள் கடலினுள் மூழ்கிக் கிடக்கின்றன. உலகில் மிக உயரமான இமயமலைத் தொடரிலுள்ள எவரெஸ்ற், கடல் மட்டத்திற்கு மேல் 8,848 மீட்டர்கள் உயரமுடையது. இது பூமிக்கு மேல்தான். ஆனால் கடல் படுக்கையிலிருந்து கிளம்பி நிற்கும் ஒரு மலை ஹவாய் தீவுகள் அருகில் உள்ளது. அதற்கு மானாகி (வெள்ளை மலை) என்று பெயர் இதன் மொத்த உயரம் 10,203 மீட்டர்கள். நீருக்கு அடியில் 5,998 மீட்டர்கள் மூழ்கி உள்ளது. கடல் நீருக்கு மேலே உள்ளது 4,205 மீட்டர்களே. உண்மையில் உலகிலேயே உயரமான மலை என்று இதைத்தான் கூறவேண்டும்.



# வாசகர் கடிதம்




மாணவர் விடியலே!

உனது ஆக்கங்கள் ஒவ்வொன்றும் படைப்பாக வருவது சிறப்பானதே. அந்த அனுபவங்கள் பலரின் உணர்வுகளை தட்டிவிட வல்லனவே ஒவ்வொரு மாணாக்கரும் உணர்வுகளை படைப்புக்களாக தருவது நிறையவே தேவைப்படுகின்றது. மென்மேலும் பலரது ஆக்கங்கள் தொடர்ந்து வந்து விடியல் போற்றப்பட வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**மு. சுதர்சன்,** தேக்கவத்தை.

அறிவைச் சுமந்து வரும் மாணவர் விடியலே!

உன்னை இரு கரங்கூப்பி வாழ்த்துகின்றோம். விடியலே! உன்னுடைய அனைத்து ஆக்கங்களும் சொல்லற்கரியது. விடியலே! இலைமறை காயாக உள்ள நாம் உன் மூலம் முன்னேறி வருவதை இட்டு மாணவர்களாகிய நாங்கள் பெருமையடைகின்றோம். விடியலே! உன்னை நாங்கள் மாலை நேர வகுப்பில் வாசித்து முழு மனிதனாவதற்கு வித்திட்டு வருகின்றோம். விடியலே! நீ இன்னும் பல ஆக்கங்களுடன் வெளிவந்து எம்மை வளர்க்கவும் நீ மென்மேலும் வளரவும் நாம் அனைவரும் இறை ஆசியை வேண்டுகின்றோம்.

**மாலை நேர வகுப்பு மாணவர்கள்,**
தம்பலகாமம்.

மாணவர் விடியலே!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் தரமானவை. அதிலும் இங்கிலிஸ் ரொம்ப ஈஸி, ஆங்கிலம் கற்கவும் பேசவும், எளிய வழி போன்ற பல அம்சங்களைச் சுவைக்கின்றோம். நாங்களும் ஆக்கங்களை பல முறை அனுப்ப முயன்றாலும் அது நிறைவேறாமல் போய் விடும். அதற்கு இன்றும் நான் முயன்றுவருகின்றேன். மாணவர் விடியலே எனது கருத்துக்களை ஏற்றுக் கொள்வாய் என நம்புகின்றேன்.

**T. கவிதா,** தரம் 08, மடுக்கரை.

அன்பின் விடியலுக்கு!

அன்பின் விடியலுக்கு நான் உனது புதிய நண்பன் என்னையும் உன் இதழ்களில் சேர்த்துக் கொள்வாயா? உன் விடியலின் சுவைகளை சொல்ல முடியவில்லை. சொல்வதற்கு வார்த்தைகளும் இல்லை. உன் சேவையின் வருகைக்காகக் காத்திருக்கிறேன். உன்சேவை மலர்ந்து மணம் பரப்ப எனது வாழ்த்துக்கள்.

**K.நிதர்சன்,** சொறிக்கல்முனை.

எனது அன்புக்குரிய மாணவர் விடியலே!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் கல்விக்கு உரியதாகும். என்னை சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கும். எனது அன்புக்குரிய மாணவர் விடியலே அடுத்ததாக சேவை என்னும் இதழுக்காய் காத்துக் கொண்டிருக்கிறேன்.

**சு. சுரேஸ்குமார்,** தரம் - 07
பாளையடித்தேனா.

அன்புள்ள எம் விடியலே!

ஆசையில் ஓர் கடிதம் நாம் எழுதுவது என்னவென்றால் நித்தம் நித்தம் புதுத்தகவல்களை உன்னகத்தே கொண்டு எம் அகத்தே தவழ்ந்து வந்து எம்மிடையே நீ ஆற்றும் சேவையே மிகப்பெரிது. எமது ஆற்றல்களை மேலும் மேலும் வளர்த்து. எம்மையும் ஒரு படைப்பாளியாக்கும் விடியலே! உன் சேவை தொடர வாழ்த்துகின்றோம். நீ அடுத்து விரிக்கும் இதழாகிய சேவை எம்மிடையே சேவை மனப்பான்மையை ஏற்படுத்தும் எனும் சந்தோசத்தில் உன் விடியலுக்காகக் காத்திருக்கின்றோம். விரைந்து வருக எம் இனிய இதழே...

**மாலை நேர ஆசிரியர்கள், மாணவர்கள்,**
சாந்திபுரம், மன்னார்.

அன்பான விடியலே!

நீ சுமந்து வந்த விடயங்களை நாம் படித்து வளம் பெற்றோம். நீ சுமந்து வந்த யுத்தம் என்ற விடியலை படித்து பல விடயங்களை அறிந்தோம். விடியலே நீ வளம் பெறுக...

**கோ. தனுசன்,** காந்திநகர்,
செட்டிகுளம், வவுனியா.

மாணவர் விடியலுக்கு அன்பான வாழ்த்துக்கள்!

எழுத்தூண்டும் மாணவர் விடியலே! உன் பணியே பணி. மாணவர்களின் அறிவைத்தூண்டி, ஆசிரியர்களின் அறிவைப் பெருக்கி, வாசகர்களின் ஆவலைத்தூண்டி, உள்ளங்களை மகிழ்வித்த உனக்கு என் இனிய வாழ்த்துக்கள். என்றும் உன் பணி தொடரவும், நிலைத்திடவும், மனம் நிறைந்து கூறுகிறேன் வாழ்க! வாழ்க! என்றும் நீ வாழ்க!

**லோ. சாளினி,** இடைக்காடு,

அன்பின் விடியலே!

நீ அள்ளித்தந்த அனைத்து அம்சங்களும் எம் சிறார்களின் மனதைக் கவரக் கூடியதாகவும், அவர்களின் அறிவைப் பெருக்குவதாகவும் இருந்தன. உனது சேவையே எமக்கு மகத்தான சேவை. அதுவே எமக்கு என்றும் தேவை. உன் அளப்பரிய சேவைக்கு எனது வாழ்த்துக்கள்!

**செ.சிவமலர்,** பறங்கியாமடு.



*அட்சய பாத்திரம் மூலம் பலபேருக்கு உணவிட்டவள்* - **மணிமேகலை**

# பாராட்டுக்கள்

CONGRATULATIONS!

**(கவிதை, ஜோக்ஸ், கட்டுரை, கதை, விடுகதை, பொதுஅறிவு, கடிதம் எழுதியவர்கள்)**

**சுண்டிக்குளி:** ச.எமில்ரன், சி.சாகித்தியன்.

**மடுக்கரை :** ஜெ.சருஜா, T.கார்த்திக், நிஷா, அனுசன், சிந்துஜா, கங்கேஸ், சரண், டிலக்சினி, ம.வோணுசியா, ர.கயல்விழி, யே.ரேணுகா, த.தனுசாயினி, எ.சாமினி.

**மனியார்குளம்:** ம.டனுசா, ம.சிந்துஜன், பி.வினோதன்.

**சங்குவேலி:** தயாழினி. **வள்ளுவர்புரம்:** க.பிரியா.

**கடலூர்:** ஆ.சஜித், ஆ.கிருத்திக்கா, நோ.அருந்தவராணி.

**காந்திநகர்:** தே. அனிற்றா, கா.மதுரா.

**வம்மிவட்டவான்:** இ.சறோஜினி, வ.பிரியதர்சினி.

**பள்ளிமுனை:** எவரஸ்டா றோச், யே.மரியவின்னி.

**வவுனியா :** கி.கிரிசாந்தன், க.புவிகரன், அ.வினோதன், யோ.பிறேமா, யோ.சுதர்சினி.

**ஆசிகுளம் :** கெ.லோஜனா, மோ.விஜித்தா, வி.டர்சினி, வி.நிவேதன், வே.லக்சிதன்.

**செட்டிகுளம்:** விதுசாயினி, இ.ராசவதனி.

**வன்னிக்கோட்டம்:** பி.நிரோஜினி, சி.நவீன்.

**கல்நாட்டினகுளம்:** சி.ஜெனித்தா, அ.யுவினா, செ.நர்மதா.

**கற்குளம்:** சு.கேதீஸ்வரன், போ.உசாந்தன்.

**அண்ணாநகர் :** சு.கஸ்தூரி, லோ.டென்சிகா, பா.மிதுஷன், அ.சூரியகுமார்.

**டச்பார்:** சி.ராஜினி.

**மாவளையாறு:** இ.மதுர்ஷனா, இ.சுதாகர்.

**சிவசக்திபுரம்:** வி.கிருஜா, பிரசாந்.

**கொடுவாமடு:** அ.சுலக்சனா, அ.நிலோஜனா.

**தம்பனைக்குளம் :** வி.விதுஷனா, ப.விதுஷன், எஸ்.சுஜனசுதர்சினி, வே.மகாலெட்சுமி.

**பொன்தீவுகண்டல்:** வாணுமதி.

**அளவக்கை:** உ.சறோஜினி, யோ.யூலியன்.

**தம்பலகமம் :** சூ.கஜேந்தினி, தி.விஜேந்திரன், த.நவனீதன்.

**மண்டைதீவு:** ஜி.நிர்மலா, க.வனிதா.

**அலஸ்தோட்டம்:** எல்.பிரவீன்.

**இடைக்காடு:** வி.ஆகாஷ், ச.நித்தியவாணி.

**மட்டக்களப்பு :** சி.சிவராணி, லோ.டிலூஷிகா, த.தவப்பிரியா, வி.விதுஸா.

**பேசாலை :** ரா.பார்த்தீபன், க.விஜிதா, நா.சுதர்சன், ஜெ.அனுசியா, த.சர்மிலா, வானுஜா.

**முள்ளியாவளை:** க.சுயந்தினி, தி.கஜன்.

**உடுவில்:** சௌமியா, நி.துளசி, பா.தர்மினி.

**தேக்கவத்தை:** ப.ஜெயம், த.ரவிதரன், வா.லாவன்யா.

**இடைக்காடு:** சே.மோகன், எ.எட்வின், கில்மன்.

**பாரதிபுரம்:** த.அனோஜ், அ.அருள்தாஸ், குமார்.

**சமயபுரம்:** ஹேமா, ராமதர்ஷினி, த.கீதா.

**கல்நாட்டி:** ச.நந்தா, செ.நமா, சி.சுவர்னா.

**பாளையடித்தோணா:** நிஷானி, அஞ்சலி, கரன்.

**எல்லப்பர்மருதன்குளம்:** மீனா, ஜக்ஷன்.

**ஆசிகுளம்:** வாணுஜா, தேவிகா, நிருஜா.

**சிவபுரம்:** தயாழினி, ம.மதுஜா.

**வாகரை:** த.தமிழ்வாணி, கிருஸ்ணவேணி.

**பூவரசன்குளம்:** கனிஸ்ரா.

**தலைமன்னார்:** டயானா, ஸ்டெபானி.

**புணாணை:** சரஸ்வதி, கோமதி.

**செம்மன்குன்று :** வி.விஜிதா, டிவதர்சினி, சுசிதா, ம.காந்தன்.

**"சேவை" விடியலுக்கு ஆக்கங்களை எழுதி அனுப்பிய அனைவருக்கும் பாராட்டுக்கள். இம்முறை வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:**

1ம் இடம் : **யூ. டிவோன்ஷி,** இரணைப்பாலை.

2ம் இடம் : **இ. ரகுவரன்,** பதுளை வீதி, காயன்குடா.

3ம் இடம் : **மு. அமலநாயகி,** அளவக்கை.

உங்களுக்குரிய பரிசுகளை உங்கள் மாவட்டத்திலுள்ள JRS அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.



எலும்பு வளர்ச்சிக்கு தேவையான விட்டமின் - **விட்டமின் D**

# சித்திரமும் கைப்பழக்கமும்



**த. சர்ஜனா**
செங்கலடி


**J. அன்ரன் சில்வெஸ்ரர்**
**பிகிறாடோ** - பள்ளிமுனை



**வே. தனுஜன்**
புல்லுமலை


**T. தர்மினி**
தம்பனைக்குளம்



**அ. டிலுக்ஷன்**
பள்ளிமுனை



**ச. ஹரிவதனன்**
பள்ளிமுனை


**J. அன்ரன் சில்வெஸ்ரர்**
**பிகிறாடோ** - பள்ளிமுனை



**J. மேரியஸ்தலா**
காட்டாஸ்பத்திரி


**M. சத்தியா**
மன்னார்


**K. றிஜு**


**அனுசாந்**
பெரியகமம்


**ச. ரம்யா**
பேசாலை


**G. யோகேஸ்வரன்**


**ச. கோகுலவர்ணன்**
இராஜபுரம்


**அகஸ்ரலா**


**රුවන්තිකා විරාජනී**
මඩුකන්ද


**රේජිනෝල්**


**உ. சித்திரா**
முருங்கன்


**வ. தினேஸ்குமார்**
தம்பனைக்குளம்


**R. ரகு**
மன்னார்




இடம் பெயர்ந்தோருக்கான கிடுகு வழங்கல்




*JRS* சூசையப்பர் முன்பள்ளி விளையாட்டு விழா




வாழ்வியல் பயிற்சி நிறைவு விழா




தேசிய இயக்குனரின் சுய உதவிக்குழுக்களுடனான சந்திப்பு




தையல் பயிற்சி நிறைவு விழா




ஆசிரியர்களுக்கான வருடாந்த வதிவிடப்பயிற்சிப் பட்டறை

**From :**
JRS
**Jesuit Refugee Service**
**31, Clifford Place, Colombo 04.**
**Tel: 011 - 2504384**

**To:**

Transcent Printers (Pvt) Ltd. T/F : +94 11 2331464